9. ,,

10. ,, காழி.

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௧௩	பவ ஆண்டு தைத் திங்கள் 1935௵ பிப்பிரவரி௴	பரல் ௬

செந்தமிழ்ச் செல்வி

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

(Editorial Board Members)

தலைவர்

1. திருவாளர் M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B. A.,
பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.

---

2. „ கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., M.L.,
தலைவர், மணிவாசக மன்றம், திருநெல்வேலி.

3. „ பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

4. „ துடிசைக்கிழார் சிதம்பரனாரவர்கள்,
போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், திருவாரூர்.

5. „ பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

6. „ T. S. கந்தசாமி முதலியாரவர்கள், B. A.,
வழக்கறிஞர், சாத்தூர்.

7. „ ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

8. „ வித்வான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், செயிண்ட்சேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.

9. „ அ. மு. சரவண முதலியாரவர்கள்,
தமிழாசிரியர், அரியலூர்.

10. „ காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளையவர்கள், B. A.,
தருமபுரவாதீன வித்துவான், சென்னை.

பொருளடக்கம்

இசைத்தமிழ்ச் செல்வர், உயர்திரு. தி. இலக்குமணபிள்ளை அவர்கள், B. A. (முகப்புப் படம்)

சுந்தரமூர்த்தி அடிகள் தேவாரம் உரை உ௪௩

திருஞான சம்பந்த அடிகள் தேவாரம் உரை
மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி.ஏ. உ௪௫

மலை (*மறைமலையடிகள்*) உ௪௬

குறுந்தொகை மூலமும் விளக்க உரையும்
இரா. சிவ. சாம்பசிவன் உ௪௭

வடமொழித் தேன்சோற்கள்
பண்டித. ஞா. தேவநேயப் பாவாணர் உ௫௩

நடுகல் *பாரிப்பாக்கம் திரு. கண்ணப்ப முதலியார்* உ௫௭

தர்மபுரி *திரு. C. M. ராமச்சந்திரஞ்செட்டியார், B. A.* உ௫௯

வடிவுதிருந்த அறிவுதிருந்தவகை
திரு. பா. வே. மாணிக்கநாயக்கர் அவர்கள்,
திரு. க. ப. சந்தோஷம் B. A. L. T., உ௬௪

சிவஞான போதக் கருத்து
மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி.ஏ. உ௬௯

காடு (*மறைமலையடிகள்*) உ௭௧

ஞாலநூல் (*திரு* S. *நடராஜன்*, B. A.) உ௭௨

உளநூல் *மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.* உ௭௫

குறுந்தொகை—ஆங்கில மொழிபெயர்ப்பு
T. B. *கிருஷ்ணசாமி முதலியார்*, M. A., B. L. உ௭௯

ஜேர்மானியர் கல்விமுறை
திரு. மா. பாலசுப்பிரமணியம், M. A. உ௮௧

இசைத் தமிழ்ச் செல்வர் உயர்திரு. தி. இலக்குமண பிள்ளை அவர்கள் B. A. உ௮௩

செய்திகளும் குறிப்புகளும் உ௪௨

மதிப்புரை உ௮௮

இணைப்புகள்:—

தமிழ்த் தோற்றத் தேற்றம் T. S. *கணேசபிள்ளை*
வாளேழுபது (*தன்மபுத்திரன்*)

இசைத்தமிழ்ச் செல்வர், உயர்திரு. தி. இலக்குமண பிள்ளையவர்கள் B.A.

(உ அ௬-ம் பக்கம் பார்க்க.)

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கரு.] பவ—தை [பரல்-சு

சுந்தரமூர்த்தி அடிகள் தேவாரம்

பொய்யா நாவதனாற் புகழ்வார்கள் மனத்தினுள்ளே
மெய்யேநின் றெரியும்விளக் கேயொத்த தேவர்பிரான்.
செய்யா னுங்கரிய நிறத்தானுந் தெரிவரியான்
மையார் கண்ணியொடு மகிழ்வான்கழிப் பாலையதே.

பதவுரை:—

செய்யானுங் கரிய நிறத்தானும்—சிவந்த நிறத்தையுடைய நான்முகனும், கரிய நிறத்தையுடைய திருமாலும்

தெரிவு அரியான்—முறையே முடியும், அடியும் தேடிக் காணுதற்கு முடியாதவண்ணம் புறத்தில் அவர்கள் நடுவே தீப்பிழம்பாய் நின்றவனும்

பொய்யா நா அதனாற் புகழ்வார் மனத்தினுள்ளே—அவ்வாறு அவர்கள் அவனைக் காணாவிடினும், மெய்யினையே கூறுகிற மெய்யடியார்களுடைய தூய உள்ளத்தினுள்ளே

மெய்யேநின்று எரியும் விளக்கே ஒத்த தேவர் பிரான்—உண்மைப் பொருள் இன்னது என்று அகத்தே முற்றிலும் விளங்கும்படி அருட்பேரொளியா யிலங்கும் மாதேவனும்

மையார் கண்ணியொடும் மகிழ்வான்—மைதீட்டிய கண்களையுடைய உமாதேவியாரோடும் (உயிர்களுக்கு அருள்செய்யும்படி) உவந்து வீற்றிருக்கின்றவனுமாகிய சிவபெருமான்

கழிப்பாலையது—திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிற திருப்பதி, திருக்கழிப்பாலையாகும்.

மாந்தர்களே, திருக்கழிப்பாலையில் வீற்றிருக்கிற சிவபெருமானை வழிபடுங்கள் என்பது குறிப்பெச்சம்.

199653

விளக்கவுரை :—

செய்யானும் கரிய நிறத்தானும்—செய்யான் = நான்முகன். செந்தாமரைமலரில் வீற்றிருப்பவனாதலின் 'நான்முகன்' 'செய்யான்' என்று கூறப்பட்டான்.

பொய்யா நா அதனாற் புகழ்வார் மனத்தினுள்ளே—பொய்யா நா = மெய்யினையே கூறுகிற நா. நேர்மையாய் ஒழுகுகிறவர்களது மனத்திலுள்ளது நாவினாற் கூறப்படுதலால், மெய்யினையே கூறுகிற நாவுடையவன் மெய்யினையே உணருகிற உள்ளத்தினையும் உடையவனாயிருப்பன். இதனால், பொய்யான உலகவாழ்வில் மயங்காது மெய்யாகிய சிவத்தினையே நினைக்கின்ற உள்ளம் மெய்யுள்ளம் என்பதும், அம்மெய்யுள்ளத்தினர் மெய்யினையே கூறுவர் என்பதும் கூறப்பட்டன. "நினைவதும் வாய்மை மொழிவது மல்லாற், கனைகழலீசனைக் காணவரிதாம்" என்றார் **திருமூலர்: திருமந்திரம் 1826-வது பாட்டு.**

மெய்யே நின்று எரியும் விளக்கே ஒத்த தேவர்பிரான்—அருள் ஒளி இங்கே விளக்கு ஒளியாக உருவகஞ்செய்து கூறப்பட்டது. ஆணவமலத்தாலாகிய அக இருளை நீக்கி, சிவமாகிய உண்மைப் பொருளை அகக்கண்ணுக்குத் தெரியச் செய்கிற அருள் ஒளியானது, இரவின்கண் புறஇருளை நீக்கிப் புறப்பொருளைப் புறக்கண்ணுக்குத் தெரியச் செய்கிற விளக்கொளி போல்வது ஆகலின், அடிகள் இங்கே அருள் ஒளியை விளக்கொளிக்கு ஒப்பாக உருவகஞ்செய்து கூறியருளினர். விளக்கு என்பது ஆகுபெயராய் விளக்கொளியைக் குறிக்கின்றது. "சோதியே சுடரே சூழொளி விளக்கே" என்று மாணிக்கவாசக அடிகள் திருவாசகத்திலும் "ஒளிவளர் விளக்கே" என்று திருமாளிகைத்தேவர் திருவிசைப்பாவிலும் கூறியருளினமை காண்க.

மெய்யே' என்பதிலுள்ள 'ஏ' பிரிநிலை குறித்தது. பொய்மை முற்றிலும் விட்டு நீங்கிய மெய் என்பது பிரிநிலை ஏகாரத்தாற் குறிப்பிடப்பட்டது. விளக்கே என்பதிலுள்ள ஏகாரம் தேற்றம் குறித்து நின்றது: பிரிநிலை குறித்தது என்றலும் பொருந்தும். விளக்கே என்றதால் திரோதமலம் முற்றிலும் நீங்கிய அருள் விளக்கம் என்பது குறிப்பிடப்பட்டது.

மையார்கண்ணியொடு மகிழ்வான்—மகிழ்கின்றான் என்று நிகழ்காலத்தாற் கூறற்பாலது இயல்புபற்றி மகிழ்வான் என எதிர்காலத்தாற் கூறப்பட்டது. இதனால், சிவபெருமான் ஐந்தொழிலையும் இயல்பாக உவந்து செய்கின்றான் என்பதும், அவன் தன்னை வழிபடும் உயிர்களுக்கு அருள் செய்தற்குத் திருக்கோயில்களில் திருமேனி கொண்டருளி யிருக்கின்றான் என்பதும் கூறப்பட்டன.

கழிப்பாலையது—'அது' பகுதிப் பொருள் விகுதி. 'ஏ' ஈற்றசை.

திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்

எண்ணொன் றி நினைந்தவர் தம்பால்
உண்ணின்று மகிழ்ந்தவ னூராம்
கண்ணின்றெழு சோலையில் வண்டு
பண்ணின்றொலி செய்பனை யூரே.

பதவுரை :—

கள் நின்று எழுசோலையில் வண்டு—தேன் எப்பொழுதும் துளும்புகின்ற (மலர்களையுடைய) சோலையிலுள்ள வண்டுகள்

பண் நின்று ஒலி செய்யும் பனையூர்—பண்ணொடு எப்பொழுதும் ஒலி செய்து பாடுகின்ற திருப்பனையூர் என்னும் திருப்பதியானது

எண் ஒன்றி நினைந்தவர் தம்பால்—தங்கள் அறிவைச் சிவபெருமானுடைய அறிவுடனே இரண்டறக் கலந்து அடங்கிப் பொருந்தும்படிசெய்து நினைக்கிற மெய் அடியார்களிடத்து

உள் நின்று மகிழ்ந்தவன் ஊராம்—அவர்களுடைய நின்மலமான தூய உள்ளத்தில் உவந்து நிலைபெற்று நின்று, அவர்களை இன்பம் நுகரச்செய்து, மகிழ்கின்ற சிவபெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்ற ஊராகும்.

விளக்கவுரை:—

கள் நின்று எழுசோலையில் வண்டு—கள் + நின்று = கண்ணின்று. கள் = தேன். நின்றுஎழு = நிலைபெற்று, அதாவது, எப்பொழுதும்.

பண் நின்று ஒலி செய்யும் பனையூர்—'வண்டு' சாதி ஒருமைப் பெயராய் 'வண்டுகளின் கூட்டத்தைக்' குறிக்கிறது. வண்டுகள் பூக்களிலுள்ள தேனை உண்ணுதற்கு ரீங்காரம் செய்தல், பண்ணொடு பாடுதலாகக் கூறப்பட்டது. இஃது இயற்கைநவிற்சியணி.

எண் ஒன்றி நினைந்தவர் தம்பால்—'எண்' என்பது எண்ணம். அஃது இங்கே ஆகுபெயராய் எண்ணத்தினாலுண்டாகும் அறிவைக் குறிக்கிறது. ஒன்றி நினைந்தவர்—பசு, பாசங்களை நினையாது சிவமாகிய பதிப்பொருள் ஒன்றினையே நினைக்கும் மெய்யடியார்கள். இது உயிருக்கும், சிவத்துக்கும் இயல்பாயுள்ள இரண்டற்ற அத்துவிதக் கலப்பு அறிவு. இயல்புபற்றி 'நினைக்கின்றவர்' என்று கூறற்பாலது 'நினைந்தவர்' என்று இறந்தகாலத்தாற் கூறப்பட்டது.

உள் நின்று மகிழ்ந்தவன்—உள் = உள்ளம். நின்று = நிலைபெற்று. மலம் நீங்கிய மெய் அடியார்கள், சிவபெருமான் தங்கள் உள்ளத்தில் நிலைபெற்றுத் தங்கி நின்று பேரின்பம் நுகர்வித்தாலன்றி, பேரின்பம் நுகரார். ஆதலின், 'உள் நின்று மகிழ்ந்த

வன்' என்று சிவபெருமானை அடிகள் கூறியருளினர். மெய்யடியார்கள் பேரின்பம் நுகர்தற் பொருட்டே, சிவபெருமான் அவர்களுடைய உள்ளத்தில் நின்று மகிழ்கின்றான் என்பது இங்கே கூறப்பட்டது. மகிழ்தல் என்பது பேரின்பம் நுகர்தல். இன்பம் நுகர்ந்தன்றி மகிழ்தல் உண்டாகாதாகலின், இன்ப உருவனாகிய சிவபெருமானுக்கு மெய்யடியார்கள் இன்பம் நுகர்தல்போல அழுந்தி அறிதல் அவ்வாறு அறிதலாகும் என்று உணர்க.

பனையூரே என்பதிலுள்ள 'ஏ' அசை. மலம் முற்றிலும் நீங்கிய மெய்யடியார்கள் தனது பேரின்பம் நுகருமாறு அவர்களுடைய தூய உள்ளத்தில் இருத்தல்போல, உயிர்கள் தன்னை வழிபட்டு உய்யும் பொருட்டுத் திருப்பனையூரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றான் என்பது இப்பாட்டின் கருத்து.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

மலை

[மறைமலையடிகள்]

மலை—மல் என்னுஞ் சொல்லடியாப் பிறந்து வலிமையினையுடையது என்று பொருள்படும்.

ஓங்கல், பிறங்கல், பொருப்பு, வெற்பு—மிகவும் உயரமாக இருப்பது.

விலங்கல்—குறுக்கே வளர்ந்து நீண்டு கிடப்பது.

சிலம்பு—எதிரொலி செய்வது.

வரை—மூங்கிற்காடுகள் உள்ளது.

இறும்பு—காடுகள் அடர்ந்தது.

குன்று, குவடு, குறும்பொறை—சிறியமலை.

பொற்றை, பொச்சை—மண் மிகுந்த மலை.

—(சிறுவர்க்கான செந்தமிழ்)

இலக்கணமும் இலக்கியமும்: LANGUAGE AND LITERATURE

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(உகஎ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மருதம்

தலைமகள் தன்னைப் பழித்துக் கூறினாள் எனக்கேட்ட காதற்பரத்தை, தலைமகற்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

ஆலங்குடி வங்கனார் பாடியது

8. கழனி மரத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மில்
கையுங் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவின செய்யும் புதல்வன் றாய்க்கே.

என்பது கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் எனக்கேட்ட காதற்பரத்தை தலைமகற்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

பதவுரை:—கழனி மரத்து விளைந்து உகுதீம்பழம்—வயற் கரையினிடத்துள்ள மரத்தில் விளைந்து முதிர்ந்து கீழே விழுகின்ற இனிய கனியை; பழனவாளை கதூஉம் ஊரன்—நீர் நிலைகளிலுள்ள வாளை மீன்கள் கௌவிக்கொள்ளும் மருதநிலத்துத் தலைமகன்; எம்இல் பெருமொழி கூறி—எம்மனையில் தங்கியிருந்த காலத்தில் எம்மைப் பாராட்டிப் புகழ்ந்து சூளுரை கூறி; தம்இல்—தன் மனையை அடைந்த காலத்து; தன் புதல்வன் தாய்க்கு—தன்னுடைய புதல்வனின் தாயான தலைவியிடத்து; கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை

போல—கை கால்களைத் தூக்கி நின்றாடினால் எதிரிலுள்ள கண்ணாடியில் தோன்றும் பிரதிபிம்பமும் அவ்வாறே செய்வது போல; மேவின செய்யும் — விரும்பியவற்றைச் செய்வானாயினான்.

கழனி—வயல். பழனம்—நீர் நிலை, ஏரி, குளம், வயல், மருதநிலம். ஊரன்—மருதநிலத் தலைவன். பெருமொழி—சபதம், சூளுரை. ஆடி—கண்ணாடி. புதல்வன் தாய் —தலைவி. மேவின—விரும்பியன. கதூஉம்—உயிரளபெடை.

இறைச்சிப் பொருள் :—

"கழனி மரத்து விளைந்துகு தீம்பழம் பழனவாளை கதூஉமூரன்" என்றது, தன் மனைவியை விட்டு நீங்கிய தலைமகனைப் பரத்தையர் தழுவிக்கோடல் அந்நிலத்தியல்பு என்றவாறாம். மற்றும், ஊரிலுள்ள எல்லா நுகர்ச்சிகளையும் தனக்கே கிடைக்குமாறு முயன்று நுகர்கின்றான் என்பதுமாம். தலைவி கடுஞ்சூலுற்றுக் கூடற்குரிய ளல்லாத காலத்துத் தலைவன் பரத்தையை மேவி இருந்து இன்பந் துய்த்துத் தங்கி நின்றானாக, தலைவி புதல்வனை ஈன்றாள் என்பதை அவற்கு அறிவித்தற்கு வெள்ளணி அணிவித்துச் சேடியைப்போக்க, தலைவன் செய்தி அறிந்து, தன் மனைக்கேகி மீள்வதாகப் பரத்தைபால் கூறி இல்லத்தை யடைந்து தன் மகனிடம் கொண்ட ஆர்வத்தால் பரத்தையிடம் மீண்டு செல்லாது இல்லின்கண்ணே தலைவியின் குறிப்பின்வழி ஒழுகி இருந்தான் என்பது காரணமாம் என்க.

"தலைவன் என்னிடத்திருந்தகாலை என் விருப்பப்படி நடப்பதாகப் பெருமொழி கூறினன். தன் இல்லினை அடைந்ததும் அவன் தன் தலைவியின் வசமாகி அவள் விருப்பப்படி நடக்கலாயினான். ஆதலின் அவள் என்னை ஏசத்தகும்" என்று தலைவன் பாங்காயினார் கேட்பப் பரத்தை கூறியதுமாம்.

புதல்வன் தாய்க்கு மேவின செய்யும்—உருபுமயக்கம்.

புதல்வன் தாய் என்றது தன்னைப்போல் இளையலல்லள்; முதியோள் என்று குறித்தவாறாயிற்று.

"கழனி மரத்து—கழனி மாஅத்து"
"மேவின செய்யும்—மேவன செய்யும்" }—பிரதிபேதங்கள்

"கையுங் காலுந் தூக்கத் தூக்கும்"—"கையும் காலுந் தூக்கத் தூங்கும்"—பிரதிபேதம்.

மேற்கோள் விளக்கம்

1. "கழனி மரத்து......தாய்க்கே"—"இல்லோர் செய்வினை இகழ்ச்சிக்கண்ணும்" என்பதன் உரையில் இளையோர் கூற்றுக்கு உதாரணமாகக் காட்டப்பட்டது.
—(தொல்—கற்பி—சூ. 151-2; தொல்—கற்பி—பக் 707)

2. இச்செய்யுளைப் "புறனுரைத்தாள் எனக்கேட்ட பரத்தை தலைவனை நெருங்கித் தலைவன் பாங்காயினார் கேட்ப உரைத்தது; இது முதுவேனில் வந்தது" என்பதற்கு மேற்கோள்.
—(தொல்—அகத்—பக் 22)

3. "கழனி மரத்து விளைந்துகு தீம்பழம் பழனவாளை கதூஉமூரன்" என்பது,

"உள்ளுறை யுவமம் இன்பதுன்பங்கள் தோன்றச் சொல்லப்படும், அதில் இது பலவகை இன்பமும் வருந்தாது பெறுவர் என்பதற்கு உவமையாகி வருதலின் 'இனிதுறுகிளவி' எனப்பட்டது" என்பதற்கு மேற்கோள். —(தொல்—உவம—134 பக்)

4. "ஆடிப் பாவைபோல மேவின செய்யும் புதல்வன் தாய்க்கே"—முதற்குறைந்து வந்ததற்கு மேற்கோள்.
—(நன்—மயிலை—153 பக்)

ஆடி—கண்ணாடி. "ஆடியானன் மதலை"—பாரதம்

5. "ஆடிப்பாவைபோல"—ஆடியுட் பாவைபோ னீயணங்கிய தணங்கவென்றான்" —(சீவக—957-4)

"நாடவினை யாடிவந்த நற்பாவை போலடியார்
கூடவினை யாடிவந்த கோமானே" —(தமிழ் விடுதூது—252)

"ஆடிப் பாவையோ டலர் நிழற்பாவை
கைகான் மெய்பிறி தெவையும் பையயத்
தூக்கிற் றூக்கி மேக்குயர் புயர்தல்" —(ஞானமிர்தம்—6)

6. "கழனி மாஅத்துவிளைந்துகு...தாய்க்கே"—என்பது, "இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்" என்பதில், பான்மையால் தலைமகனை இகழ்தல் என்பதற்கு மேற்கோள்.
—(தொல்—கற்பு—இளம்பூ 260 பக்)

7. கழனி மரத்து விளைந்துகு தீம்பழத்தைப் பழன வாளை கவ்வுவதுபோல் ஊரிலுள்ள எல்லா இன்பங்களையும் முயற்சியின்றித் தலைவன் எய்துகின்றான் என்றது உள்ளுறை யுவமம். என்னை?

"உள்ளுறை யுவம மேனை யுவமமெனத்
தள்ளா தாகுந் திணையுணர் வகையே"
—(தொல் பொருள்—அகத் 46)

"உள்ளுறுத் ததனோ டொத்துப் பொருள்முடிகென
உள்ளுறுத் திறுவதை யுள்ளுறை யுவமம்"—
என்பனவற்றாலறிக. —(தொல்—பொருள்—அகத் 48)

மெய்ப்பாடு—மடம்பற்றிய நகை என்க. என்னை?
"எள்ளல் இளமை பேதமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான் கென்ப"—(தொல்—மெய்ப்—4 சூ)

பயன்—தலைவனைப் பழித்தல்.

நெய்தல்

தலைமகன், பரத்தையிடமிருந்து பிரிந்துவந்து தலைவியின் தோழியை யணுகித் தலைவியின் ஊடலைத் தணிப்பதற்கு வாயில் வேண்ட, தோழி தான் வாயில் நேர்ந்ததைக் குறிப்பால் அவனுக்கு உணர்த்தியது.

கயமனார் பாடியது

9. யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே;
பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானுந்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ணாணிக் காப்பா டும்மே.

என்பது தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது.

பதவுரை:—யாய்ஆகியள்—எவர்க்குங் கற்பினால் தாய் எனத்தக்காளும்; மாஅயோள்—அழகிய மாமை நிறத்தை யுடையோளுமாகிய தலைவி; மடைமாண் செப்பின்—சந்து தெரியாமல் மூடப்பட்ட மூட்டு வாயினையுடைய மாட்சிமைப் பட்ட செப்பிலே; தமிய—தனியாக; வைகிய—அடைத்து வைக்கப்பட்ட; பெய்யாப் பூவின்—சூடாத பூவைப்போல; மெய்சாயினள்—உடல் வாடி அழகு கெடுவாளானாள்; பாசு அடை நிவந்த—பசிய இலை நீர்மேல் உயர்ந்து காணப்படு கின்ற; கணைகால்—திரண்ட காம்பையுடைய, நெய்தல்—கரிய நெய்தல் மலர்; இனம் மீன் இரும்கழி ஓதம் மல்குதொறும்—திரளாகிய மீனையுடைய பெரிய கழியில் நீர் மிகுந்தொறும்; கயம் மூழ்கு மகளிர் கண்ணின் மானும்—நீர்நிலையில் மூழ்கு கின்ற மகளிர் கண்களை ஒத்திருக்கின்ற; தண் அம்துறை வன்—குளிர்ச்சி பொருந்திய அழகிய கடற்றுறையை யுடைய தலைவனது; கொடுமை—கொடுமையை; நம்முள் நாணி—நம் மிடத்துச் சொல்லவும் வெட்கமுற்று; காப்பாடும்—மறைத் துக் காப்பாற்றிக் கொள்வோம்.

யாய்—தாய். புலத்தற்கு உரிய காரணம் பல உளவாக வும், அவற்றைக் கருத்துட் கொள்ளாதாள் என்றமை தோன் றத் தலைவியை 'யாய்' என்றார்; மற்றும், புதல்வனைப் பெற் றமையாலும் 'யாய்' என்றார். மாயோள்—மாமை நிறத்தை யுடையவள். கண்ணின்மானும்—உருபு மயக்கம் (கண்ணினை) என்றும், உருபுஇன்றிச் சாரியைமட்டும் வந்தது என்றும் கூறுப. காப்பு—காப்பாற்றல் [கரப்பு—மறைத்தல்]. காப் பாடும்மே—உம்மை சிறப்பின்கண் வந்தது.

மேற்கோள் விளக்கம்

1. "யாயாகியளே" —(குறுந்—10-1)

2. "மடைமாண் செப்பில் வைகிய பெய்யாப்பூவின் மெய் சாயினளே"—"வகைவரிச் செப்பினுள் வைகிய மலர்போல், தகை நலம் வாடி" —(மணிமே –4-65)

"வகைவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்"
—(மருதக்கலி—3-15)

"பெய்யாது வைகிய கோதை போல, மெய்சாயினையவர்"
—(நற்—11-12)

"சீர்தங்கிய பெய்யா மலரிற் பிறிதாயினளே"—(சீவக.—1960)

"பாதிரிக் குறுமயிர் மாமலர், நறுமோரோடமொடுடனறிந் தடைச்சிய செப்பிடந்தன்ன நாற்றம்" —(நற்—337: 4-6)

"செப்புவாயவிழ்ந்த நறுவிரை நறுமலர்"
—(சிலப்—22: 121-12)

"பித்திகைக் கோதை செப்புவாய் மலரவும்"
—(பெருங் (1) 33-76)

"கற்பக மாலையுஞ், சேமமணி நகைச் செப்பினு ளேந்துபு"
—(சூளாமணி மந்திரப்—54)

3. "கணைக்கால் நெய்தல்"—கணைக்கால் என்பது நீர்ப்பூக் களுள் ஆம்பல், குவளை, நெய்தல், மருது என்பனவற்றிற்கு அடை யாக வரும்.
—நற் 230, 262, 138; ஐங் 68, திணைமொழி 23; நெய்தற்கலி 2-5.

"முயப்பிடிச் செவியன்அன்ன பாசடைக்
கயக்கணக் கொக்கின் கூம்புமுகை யன்ன
கணைக்கா லாம்ப லமிழ்துநாறு தண்போது" —(நற்—230)

"பனைத்தோ ளரும்பிய சுரும்பிற் கணைக்காற்
குவளை நாறுங் கூந்தல்" —(நற்—262)

"பாசடைக் கலித்த கணைக்கா னெய்தற்
பூவுட னெறிதரு தொடலை தைஇக்" —(நற்—138)

"கண்ணி விடியற் கணைக்கா லாம்பல்" —(ஐங்குறு-68)

"கண்பாயல் பெற்றபோற் கணைக்கால மலர்கூம்ப"
—(நெய்தற்கலி—2: 5)

4. "பாசடைநெய்தல் மகளிர் கண்ணின் மானும்"
சிறுபாசடைய செப்பூர் நெய்தற்,
றெண்ணீர் மலரிற் றொலைந்தகள்" —(நற்— 23)

"கன்ணோர் ஒப்பின் கமழ்நறு நெய்தல்" —(நற் - 283-2)

"நெய்தற் கூம்புவிடு நிகர்மலரன்ன,
வேந்தெழின் மழைக்கணெங் காதலி"—(அகநா—83 12. 14)

"நெய்தற்போ தனைய வுண்கண் நேரிழை"
—(திருவிளை—மாபாதகம்-36)

"நெய்தல் மலரன்ன கண்" —(நெய்தற்கலி—25: 23)

5. "தண்ணந் துறைவன் கொடுமை, நம்முணணிக் காப்பா டும்மே" என்பது பாணர்க் குரைத்தது"—(தொல் - செய்-பக்: 505)

6. "பாசடை நிவந்த கணைக்கா னெய்தல், இனமீ னிருங்கழி யோத மல்குதொறுங், கயமூழ்குமகளிர் கண்ணின்மானும்"—என்பது பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்தமை என்பதற்கு மேற்கோள்
—(தொல் - அகத்-இளம்பூ -சூ 5.)

7. "கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்"—"என இன் வேற் றுமையும் உவமஉருபோடு வந்தது" —(தொல்-உவம - 105)

இது வினையுவமத்திற்கும் மேற்கோள். —(தொல்-உவம - 106)

8. "பாசடை நிவந்த......கண்ணின் மானும்"—பொருட்கு அடுத்த அடையும் உவமவடைக் கேற்றது உணரப் படாதன களையப் படும்" என்பதற்கு மேற்கோளாகக் காட்டி இதில் "பாசடை நிவந்த கணைக்கால் என நெய்தலாகிய பொருட்குவந்த அடை இரண்டும் கண் ணெனப்பட்ட உவமத்திற்கேற்ப வாராமையான் அவை தெளி மருங் கில என்று களைந்து கொள்க" —என்பர்-(தொல் - உவம-பக் 123)

9. "யாயா கியளே......கரப்பாடும்மே"—"பேணு ஒழுக்கம் நாணிய பொருளினும்" என்ற (தொல் - கற்பி: 150—சூ) சூத்திர வழக்கு உதாரணமாகக் காட்டித் 'தலைவனது பேணு ஒழுக்கத்திற்குத் தலைவி நாணிய பொருளின் கண்ணும்' என்பதற்கு மேற்கோள் காட்டினர். —(தொல் - கற்பி - பக். 692)

10. இச்செய்யுளைப் 'பாங்கி மனைவியைப் புகழ்தல்' என்பதற்கு உதாரணம் காட்டினர். —(நம்பியகப்பொருள் - சங்கப்பதிப்பு)

11. 'நெய்தல் கண்போல் பூத்தல்'—"சுறவம், கழிசேர் மருங் கிற் கணைக்கா னீடிக், கண்போல் பூத்தமை கண்டு நுண்பல, சிறு பாசடை நெய்தல்" என்பதால் அறிக. —(நற் - 27)

12. கயமூழ்கு மகளிர்கண் சேக்கும் என்பதை "மாயிரும் பனித் தடம் படிந்து மையழி, சேயரி நெடுமலர்க் கண்கள் சேந்தென"
—(சூளாமணி-131) என்பதனாலறிக.

13. இக்குறுந்தொகைச் செய்யுளின் கருத்தோடு அடியிற்காணும் திருக்கோவையாரின் செய்யுட்கருத்தையும் ஒப்பிட்டுக் காண்க.

"வேயாது செப்பினடைத்துத் தனிவைகும் வீயினன்ன
தீயாடி சிற்றம் பலமனை யாடில்லை யூரனுக்கின்
றேயாப் பழியென நாணியென் கண்ணிங் ஙனே மறைத்தான்
யாயா மியல்பிவள் கற்புநற் பால வியல்புகளே"
—திருக்கோவை—374.

"மடைமாண் செப்பிற் றமிய வைகிய"—"மடைமாண் செப்பிற் றமியள் வைகிய" என்பது பிரதிபேதம்.

"நம்மு ணணிக் காப்பாடும்மே"—"நம்மு ணணிக் கரப்பாகும்மே" என்பது பிரதிபேதம்.

மெய்ப்பாடு :—வருத்தம் பற்றிய இளிவரல்.
பயன் :—வாயில் நேர்தல்.

வடமொழித் தென் சொற்கள்

[பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர்]

உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் ஒரு பெருந் தாய் மொழியினின்றும் உதித்தவை யென்பது வரலாற்றுநூல் (History) குலநூல், (Ethnology), மொழிநூல் (Philology) முதலிய பல நூல்களாலும் வலியுறுத்தப்படும். ஆயினும் திசைச்சொல் வகையில் ஒரு வகுப்பார் புதியனவாய் ஆக்கிக் கொண்டனவும், தாய்மொழியினின்றும் புதியனவாய்த் திரித் துக்கொண்டனவுமான இருவகைச் சொற்கள் ஒவ்வொரு மொழிக்கும் சிறப்பாகும். ஒவ்வொரு மொழிக்கும் சிறப் பாகும். இவ்விருவகைச் சொற்களும் ஒருகிளைமொழிக் குரிய அதன் தாய்மொழியைச் சாரும்; ஒரு தாய் மொழிக் குரியவை ஒரு பெருந் தாய்மொழியைச் சாரும். திராவிட மொழிகளை நோக்கத் தமிழ் ஒரு தாய் மொழியும், ஆரிய மொழிகளை நோக்க ஒரு பெருந் தாய் மொழியுமாகும். எண்ணிறந்த தமிழ்ச் சொற்கள் இறந்து பட்டமையாலும், ஆரியச் சொற்களில் பல உருத்தெரியாத

னாறு அத்துணைத் திரிந்துள்ளதினும், பல வடசொற்கள் வடமொழிச் சிறப்புச் சொற்களாகவே தோன்றுநிற்கும். ஏனைச் சொற்களை இதுபோதுள்ள தென்சொற்றுணை கொண்டே தென் சொல்லெனக் காட்டல் மொழி நூலான் முட்டின்றி முடிவதாகும். இடுகுறிச் சொற்களாயின் இவ் வரம்பிற் குட்படா.

ஒரு சொல்லை ஒரு மொழிக் குரியதென்று அறிதற்கு அதன் பகுதி (Stem) அல்லது மூலம் (root) எம்மொழியி லுள்ளதென்று அறிதல் வேண்டும்.

ஒரு சொல்லின் பகுதி அல்லது மூலம் பலமொழியி லிருப்பின், எம்மொழியில், பகுதி இயற்கையானதென்றும், பொருள் சிறந்ததென்றும் அறிதல் வேண்டும்.

பலமொழியிலும், பகுதி வடிவிலும் பொருளிலும் ஒத் திருப்பின், எம்மொழியில் அதன் திரிசொற்களுள வென்றும், அவையும் பல மொழியிலிருப்பின், எதில் அவை கழிபல வென்றும் காண்டல் வேண்டும்.

எத்துணையோ தென் சொற்களை வட சொற்களென்று பன்மொழிப் பேரறிஞருங்கூடப் பகர்ந்து வருகின்றனர். அவற்றுட் சில வருமாறு:—

அகங்காரம். அகம்+காரம். அகம் - அவ்வுலகம், வானுலகு, மோக்ஷம். அகரச்சுட்டடியாப் பிறந்தது; சேய்மையி லுள்ள வானுலகத்தைக் குறிப்பது; அம்பர் என்னும் சொற் போல. அ-அம்பர் - அம்பரம். இகரச் சுட்டடியாப் பிறந்த இகம், இம்பர் என்னும் சொற்கள் அண்மைச் சுட்டாய் இவ் வுலகத்தைக் குறித்தல் காண்க.

விண்ணுலகையும் மண்ணுலகையும் சேய்மை அண்மை பற்றி அவ்வுலகம் இவ்வுலகம் என்பது மரபு.

> 'அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க்
> கிவ்வுலக மில்லா கியாங்கு.'

என்றார் திருவள்ளுவரும்.

வீடு என்னும் முத்திப் பெயர் இல்லத்தை உணர்த் தினாற்போல, அகம் என்னும் பெயரும் இல்லத்தை உணர்த் தும். வீடு=விடுதலை; விடுவது வீடு. பிறவித் துன்பத்தினின் றும் விடுதலை செய்வது பேரின்ப வீடு. வெயில் மழைத் துன் பத்தினின்றும் விடுதலை செய்வது இவ்வுலக வீடு.

இல் என்னும் வீட்டுப் பெயர் ஏழாம் வேற்றுமை உரு பாய் உட்பாகத்தைக் குறித்தாற்போல, அகம் என்னும் வீட்

டுப் பெயரும் உட்பாகத்தையும் உள்ளத்தையும் குறிக்கும் 'அகம் என் கிளவி' எனத் தனித்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியத்துள்ளும் கூறப்பட்டுள்ளது.

காரம்: கரி என்னும் வினையடியாப் பிறந்த தொழிற் பெயர். கரி+அம்=காரம்; முதனிலை திரிந்து விகுதி பெற்ற தொழிற்பெயர். Cf படி+அம்=பாடம். தவி+அம்=தாவம்.

கரித்தல் மிகுதல். காரம் மிகுதி.

கரி என்பது கடி என்னும் உரிச்சொல்லின் திரிபு.

ட-ர போலி. Cf. படவர்—பரவர். முகடி—முகரி. உப்புக்கரிக்கும், உப்புக் கடுக்கும் என்பன ஒருபொருள் பற் றிய உலக வழக்கு. கடி என்னும் உரிச்சொற்பொருள்களுள் மிகுதியும் ஒன்று.

காரம் என்னும் சொல் முதலாவது மிகுதியை உணர்த் திப் பின்பு உறைப்பு மிகுதியை உணர்த்தும்.

கரி என்னும் சொல்லே அதி என்னும் உபசர்க்கம் (prefix) பெற்று அதிகரி என நிற்கும். அதிகரிப்பது அதிகாரம்.

அதி என்பது ஒரு மிகுதிப் பொருளுபசர்க்கம் (Intensive).

அதிகாரத்தை (ஆணை மிகுதியை or ஆற்றல் மிகுதியை) உடையவன்) அதிகாரி.

ஒரு நூலின் பெரும்பாகம் அதிகாரம்.

அகம் கரிப்பது அகங்காரம். அகங்காரம்—ஆங்காரம்.

அகண்டம். அ+கண்டம். அ, எதிர்மறை உபசர்க்கம், அல் என்பதன் குறுக்கம். அல் என்னும் எதிர்மறைச் சொல்லே un என்று ஆரியமொழிகளில் திரியும். இல் என் பது il, in, im, என்று திரியும்.

கண்டம்:

கண்—கணு—கண்டு—கண்டம்

கண்டு—கண்டி. Cf. துண்டு—துண்டி. தண்டு—தண்டி —தடி.

கண்போன்று இருப்பது கணு.

கணுக்கணுவாய் நறுக்குவது கண்டு.

கண்டு என்னும் பெயரினின்று கண்டி என்னும் வினை யுண்டாகும். கண்டித்தல் கணுக்கணுவாய் அல்லது துண்டு துண்டாய் வெட்டுதலும், அங்ஙனம் வெட்டுதல் போற் கடு மொழி கூறலும்.

கண்டிப்பது கண்டம். கண்டி + அம் = கண்டம். Cf. துண்டி + அம் = துண்டம். தண்டி + அம் = தண்டம்.

கண்டி என்னும் சொல் இடைக்குறைந்து கடி என்றும் நிற்கும். Cf. தண்டி—தடி.

கண்டம் என்பதன் நீட்டல் காண்டம். Cf. கரணம்—காரணம்.

கண்டம் = துண்டு, பாகம், பிரிவு.

கண்டம் என்பது சதைப்பாகம் நிலப்பாகங்களையும், கண்டம் (Canto) என்பது நூற்பாகங்களையும் குறிக்கும்.

Canto என்னும் ஆங்கிலச் சொல்லை Cano (to Sing) என்னும் Latin வினையடிப்பிறப்பாகக் கொள்வது சிறந்ததன்று.

அகதி. அ—அல் என்பதன் கடைக்குறை.

கதி—செலவு, கட என்பதன் திரிபு.

கதித்தல் - செல்லுதல். கதி + அம் = கதம்.

இராக்கதம்—இராச் செலவு

இராக்கதன்—இராச்சென்று உணவு தேர்பவன்.

இராக்கதன்—ராக்ஷஸன்—(Transliteration)
நிசாசரன் (Translation)
நிசி = இரவு; சரம்—அசைவு, செலவு.

அகந்தை. அகம்—அகந்தை, அகத்தின் மிகுதி.

அகம் = மனம். Cf. குடம்—குடந்தை (கும்பகோணம்). உடம்—உடந்தை. Cf. உள்ளம் = ஊக்கம், உள்ளத்தின் மிகுதி.

அகராதி. அகரம் + ஆதி. அகரம்—கரம் சாரியை.

ஆரியர் இந்தியாவிற்கு வருமுன்னும் வடமொழியில் இலக்கணம் வகுக்கப்படுமுன்னும், தமிழில் இலக்கண நூல்களிருந்தன. அவற்றின் வழிநூல்களே அகத்தியமும், தொல்காப்பியமும். கரம், காரம் முதலிய எழுத்துச் சாரியைகள் மேனாட்டுமொழிகட்கில்லை. ஆதி பொதுச்சொல்.

அகார்ணம். அ + காரணம்.

கரணம்—காரணம். கரு + அணம் = கரணம்.

கருத்தல்—மேகம் கருத்தலைக் குறிக்கும்.

கரு—கார். மேகம் சூல் கொள்ளும்போது கருத்திருத்தலின் மக்களின் சூலும் கரு, கருப்பம் எனப்படும்.

மேகம் கருத்து மழைபொழிவது உலகவினைகட்கெல்லாம் காரணமாயிருத்தலின் கரு என்பது காரணத்தையும் குறிக்கும்.

'வானின்றுலகம் வழங்கி வருதலால்'

என்றார் திருவள்ளுவரும்.

கரணம், கருவி என்பன கரு என்னும் ஒருவினைத் தொழிற்பெயர்கள். திரிகரணம் = முக்கருவி. அந்தக்கரணம்-உட்கருவி. கரணம்—அணம் விகுதி. கருவி—வி விகுதி. கரணத்தின் நீட்டம் காரணம். கருவி மேகத்தின் தொகுதியையும் உணர்த்தும்: உ-ம். 'கருவி மாமழை' 'கருவி தொகுதி'—தொல்காப்பியம். கரு—கார் கார் + அணம் = காரணம். கார் + இயம் = காரியம், இயம் தொழிற் பெயர் விகுதி. (தொடரும்)

நடுகல்

[தமிழ்ப்புலவர் பாரிப்பாக்கம் திரு. கண்ணப்ப முதலியாரவர்கள்]

'நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு'.

என்னும் பெருநாவலர் திருவாக்கின் வண்ணம், உயிர்களின் நிலைபேறில்லா நிலையையே நிலைத்த புகழாக உடையது இவ்வுலகம். இதன்கண் தோன்றின மறைதலும் மறைந்தன தோன்றலும், பிறந்தன இறத்தலும் இறந்தன பிறத்தலும் இயற்கை நிகழ்ச்சிகளாக இராநிற்கின்றன; இவ்வாறு உயிர்கள் இப்பிறப் பிறப்பாகிய வட்டங்களின் சுழற்சியின் இடைகிடந் துழலுங்கால் உண்டாம் ஆற்றாத் துயர்க்கு ஓர் அளவின்றாம். இதனை விரித்துரைத்தல் வேண்டா. இதனானே

'பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு'

எனத் தெய்வப் புலவர் வற்புறுத்துவா ராயினர். இங்ஙனமாய இப்பிறவிவெங்கோடையின் உறுதுயர் உண்மையாணுணர்ந்து இவ்வுலகியலால் வரும் இன்பமனைத்தும் கணந்தொறும் அழிந்தொழியும் கானல்நீராமெனக் கண்டு அவாவினை ஆற்ற அறுத்தாரான் எய்தப் பெறுவது மணியினது ஒளியும் மலரினது நாற்றமும் சந்தனத்துத் தட்பமும் போல உண்ணின்று எழுதரும் ஒரு பேரின்பவெள்ளத்தது என்று கூறப்படும் வீடுபேறாம்.

மறந்து மறந்து அறிதலும், மயங்கி மயங்கி அறிதலும் இயல்பாக உடைய சிற்றறிவுப் பசுக்களாகிய ஆன்மாக்கள் இறைபணி நிற்றலாகிய தன்னை அறிந்து வழிபடும் நெறிக்கண் நின்று வழிபட்டு, அவா அறுத்துப் பிறவா நன்னெறி எய்துதற் பொருட்டே இவ்வுலகினைத் தோற்றுவித்து அளித்துப் பின்னழித்து அருள்செய்து வருகின்றான் இறைவன் என ஞான சாத்திரங்கள் நவிலாநின்றன.

‘வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே’

‘வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டம் வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூறப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ’

‘மானிடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக்காக அன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் தனைஅருச் சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ’

என்றது போலும் திருவாக்குக்கள் இக்கருத்தினையே கருக் கொண்டுள்ளவாறு காண்க.

இவ்வுண்மை யுணர்ந்து வீடுபேற்றின் அவாமிக்குடையராய்ப் பல பிறப்பிடை இறைபணி நிற்றலின் தவமுதிர்ச்சி பெற்றுப் பண்டை நற்றவத்தால் தோன்றிப் பரமனைப் பக்தி பண்ணும் தொண்டர்கள் பரமானந்தப் பழங்கடலாகவுள்ள இறைமுதற் பொருளாம் பரசிவத்தொடு இரண்டறக் கலத்தலாகிய சிவமாந்தன்மைப் பெருவாழ்வினை எய்தப் பெறுவார்கள். இந்நித்திய நிரதிசயானந்தப் பெருவாழ்வுறுவோர் புனிததேகம் தத்துவசுத்தியுடையதாகலின் இது பேரொளிப் பிழம்பாக விளங்கும் இறைமுதற் பொருளாம்; எம்பெருமான் செம்பொற் சோதியினும் அவனது திருவருள் விலாசப் பரவெளியினும் கலந்திடும் தன்மைத்தாம் ஒரு நிலையினை உடையதாய் இலங்குகின்றது. இனி, எஞ்சி நின்ற மக்கட்பாடுடைய நம் போன்றார் பூதவுடல் உயிர் நீங்கியவழிச்செயலற்று வீழ்ந்து படுவதொன்றாக் இலங்கலின் இவ்வுடற் சம்பந்தமுடைய பின்னோர் இதற்கு ஆற்றவேண்டிய கடனை இனி ஆராய்வோம். (தொடரும்)

ஆராய்ச்சிப் பகுதி-Research

தர்மபுரி

[திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B.A.]

இவ்வூர் தர்மபுரி தாலூகாவின் தலைநகர். சென்னைப் பெரும்பாதையில் இருக்கிறது. மற்றும் பல ஊர்களுக்குச் செல்லும் பாதைகள் இவ்வூர் வழியாகச் செல்கின்றன.

இவ்வூரில் பழைய கட்டிடங்கள் சில இன்னும் இருக்கின்றன. தாமஸ் மன்ரோ வசித்த பங்களா இருந்த இடத்தில் இப்பொழுது தபாலாபீஸானது இருக்கிறது. இவ்வூரில் 12 கோயில்களுக்கு தஸ்திக் வருமானம் வருகிறது. ஆனால், கோட்டையிலுள்ள ஆலயத்தைத் தவிர மற்றவைகளில் யாதொரு சிற்பச் சிறப்பும் இல்லை. 1803-ஆம் ஆண்டு முதல் 1820 வரை இருந்த கலெக்டர் ஹார்கிரேவ் காலத்தில் நரசையன் என்பவன் ஒரு குளத்தைக் கட்டினான். அவன் செய்த அட்டூழியங்களை மறைப்பதற்காக இந்தத் தருமத்தைச் செய்தான் போலும். 1808 முதல் 20 வரை இவ்வூர் இச் சில்லாவின் தலைநகராக இருந்தது. பிறகு நரசையன் செய்த பழிச் செயல்களால் தலைமை நிலையம் சேலத்திற்குப் போய்விட்டது.

தர்மபுரிக் கோட்டையானது ஊருக்கு வடக்கே சந்தைக்கு அடுத்தாற் போல் மொரப்பூர், காவேரிப் பட்டினம் பாதைகளுக்கு இடையில் இருக்கிறது. இதற்கு அடுத்திருக்கும் பாகத்திற்கு டைக்ஸ் (Dykes) பேட்டை என்று பெயர். இக்கோட்டையின் மதில்களைக் கொடும் பஞ்ச காலத்தில் அழித்து விட்டார்கள். இவை இருந்த இடத்தையும் கண்டுபிடிக்க முடியாது. இக்கோட்டைக்கு வடபுறத்தில் இராமக்கா குளத்தினாற் பாயப்பட்ட வயல்கள்தாம் இருக்கின்றன. ஆகையால் இராணுவ சம்பந்தமாக இக்கோட்டை சிறந்திருக்க முடியாது. இப்போது கோட்டை இருந்த இடத்திற் சில குடிசைகள் தாம் இருக்கின்றன. சிவாலயத்திற்குத் தெற்கில் ஜேம்ஸ் ஐவிஸ் (Ivis) என்ற ஒரு சேனைத் தலைவனுடைய சமாதி இருக்கிறது. மகித்பூர் என்ற இடத்தில் நடந்த சண்டையில் இவன் புகழ் அடைந்தவன்.

சிவாலயத்தின் சுவாமியின் பெயர் மல்லிகார்ஜுனர். ஆலயக் கட்டிடத்தைப் பார்க்கையில் 8, 9-ம் நூற்றாண்டுகளில் ஆண்ட, பின் பல்லவர்களின் ஆலய அமைப்புப் போன்று

இருக்கிறது. அம்மன் கோயிலானது பெரியது. அதனுடைய அமைப்பும் சாதாரணமானதன்று. தளவரிசை மிக உயர்ந்து இருக்கிறது. அதற்குப் படிகள் வைத்திருக்கிறார்கள். அஸ்திபாரச் சுற்றுகள் முழுதும் இராமாயணக் கதைகளை விளக்கும் சிற்பங்களை உருக்கமாகச் செதுக்கியிருக்கிறார்கள். நிலஅமைப்பு 48 மூலைகள் கொண்டதாயிருக்கிறது. ஆகவே வெயிலடிக்கும்போது ஒளியும் நிழலும் மிகவும் அழகாகத் தோன்றுகின்றன. ஆலயத்துள் மண்டபத்தின் ஒரு தூண் நிலத்தில் ஒட்டாமல் நிற்கின்றது.

விஷ்ணு ஆலயமானது சிவாலயத்திற்குப் பின்னால் இருக்கிறது: அது சிவாலயத்தைவிடச் சிறியது. சுவாமியின் பெயர் பரவாசுதேவர். அவ்வாலயத்திற்கு இப்போது 583 ரூபாய் தஸ்திக் வருகிறது. ஆனால் அது கவனிப்பாரின்றிச் சீர்கெட்டு வருகிறது. ஒரு காலத்தில் ஒரு கிறிஸ்துவ முனிசிப்பு இக்கோயிலில் நுழைந்து விக்கிரகத்தைத் தொட்டபோது அதன் கண்ணிலிருந்து கண்ணீர் வடிந்ததாம். அக்குற்றத்திற்காக அம்முனிசீப்பிற்கு அபராதம் விழுந்ததாம். அருகே, பாதைக்கு அருகில் சமண உருவத்தைப் போன்று செதுக்கப்பட்ட இரண்டு உருவங்கள் இருக்கின்றன. அவைகளை ஊரார் இராமக்காள், இலட்சுமக்காள் என்று சொல்லுவார்கள்.

பழைய தருமபுரி (ஹளே தருமபுரி) என்ற ஊரில் யாதொரு சிறப்பும் கிடையாது. நரசிம்ம ஆலயம் ஒன்றுதான் அங்கே உண்டு.

தாமஸ் மன்ரோ என்றவர் தர்மபுரியில் முன்காலத்தில் இருந்திருக்கிறார். அவ்வூரில் ஓர் அழகிய தோட்டத்தை ஏற்படுத்தினார். அதற்கு அருகில் மாந்தோப்பு ஒன்று இருந்ததாம். மற்றொரு புறத்தில் நெடிய மலைகள் தெரியுமாம். அத்தோட்டத்தில் 100 அடிச் சதுரமுள்ள ஒரு குளத்தை வெட்டி அதற்குக் கற்படிகள் அமைத்தாராம். அதில் ஓர் ஊற்று எப்போதும் 10 அடிக்குக் குறையாமல் தண்ணீர் கொடுத்து வந்ததாம். அதில் அடிக்கடி அவர் குளிப்பாராம். மா, ஆரஞ்சு முதலிய மரங்களையும் திராட்சை முதலிய கொடிகளையும் நட்டாராம். தினந்தோறும் அத்தோட்டத்தில் ஒரு மணி நேரம் இருந்துவிட்டு வீட்டிற்குத் திரும்பும்போது விசனத்துடன் திரும்புவாராம். இதைப்பற்றி எழுதிய லீ பானு (Le Fanu) என்ற கலெக்டர் இத்தோட்டம் இருந்த இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், தர்மபுரியில் இவ்வளவு பெருமை வாய்ந்த இடம் கிடையாதென்றும் ஏளனமாக எழுதியிருக்கிறார். ஆனால் மன்ரோவின் ஞாபகச் சின்னமாக ஒரு தூண் இவ்வூரில் இப்போதும் இருக்கிறது.

தருமபுரியின் பழைய பெயர் தகடூர் என்பது. இதனைச் சிறப்பித்துச் சங்க நூல்கள் கூறுகின்றன. **தகடூர் யாத்திரை** என்ற ஒரு பண்டைய நூலும் இருந்ததாகத் தெரிகிறது; ஆனால் இப்பொழுது கிடைக்கவில்லை. சங்கத்தார் காலம் முதல் நூற்றாண்டு என்பர். அக்காலத்தில் அதியமான் நெடுமான் அஞ்சி என்பவனும் அவனுடைய மகன் பொகுட்டெழினி என்பவனும் இவ்வூரை ஆண்டனர். அவர்களைப் பற்றி ஔவை மூதாட்டியார் பல பாக்களைப் பாடியிருக்கின்றார். பெரும் சேரல் இரும்பொறை என்ற சேரமன்னன் தகடூரை முற்றுகை யிட்டு வென்றான். நெடுமானஞ்சியும் அச்சேரனால் தோல்வி யடைந்தான்.

சேரனுடைய படை வருவதைக் கண்டு நெடுமானஞ்சியின் மகன் எழினி தன் சேனைகளை எதிரே நடத்திச் சென்று போர் புரிந்தான். முதல் நாள் போரில் எழினியின் சேனைகள் பின்வாங்கிக் கோட்டைக்குள் புகுந்தன. இரண்டாவது நாள் கோட்டையின் சுற்றிலுமிருந்த முள்ளங்காடு அழிக்கப்பட்டது. பிறகு அகழி தூர்க்கப்பட்டது. யானைகளைக் கொண்டு கோட்டையின் கதவுகள் தாக்கப்பட்டன.

பின்னர் நடந்த போரில் எழினியும் அவன் வீரர்களும் அஞ்சாநெஞ்சுடன் போர்புரிந்தும் பகைவரால் வெட்டப்பட்டனர். தர்மபுரிக் கோட்டையும் சேரர் வசம் சேர்ந்தது. அது சங்கத்தார் காலம் முதலே இருந்தது எனலாம்.

கல்வெட்டுகளின் ஆதாரம் 9, 10-ம் நூற்றாண்டுகளில்தான் கிடைக்கிறது. அக்காலத்தில் நொளம்ப பல்லவர்கள் தலைமை சிறக்க ஆரம்பித்தனர். நொளம்பாதி ராஜன் என்பவன் மேற்குக் கங்க மன்னன் ராஜமல்லன் (கி. பி. 840—870) என் பவனுடைய மகள் ஜெயப்பே என்பவளை மணந்தான். பிறகு அவன் மகன் மகேந்திராதி ராஜன் நொளம்பர்கள் தலைவனான். கங்கர்களுக்கும் நொளம்பர்களுக்கும் ஏற்பட்ட இந்த சம்பந்தத்தால் மகேந்திரன் வலுப்பெற்றுப் பாரமஹாலிலிருந்த பாணர்களைத் துரத்திவிட்டான். தர்மபுரிக் கோட்டையிலுள்ள மாரியம்மன் கோயிலில் கி. பி. 878-வது ஆண்டில் மகேந்திரனுடைய கன்னட மொழிக் கல்வெட்டு ஒன்று இருக்கிறது. மகேந்திரனுடைய மற்றொரு கல்வெட்டு கி. பி. 893-ல் மல்லிகார்ஜுன ஆலயத்து மண்டபத்திலுள்ள கற்றூணில் செதுக்கப்பட்டுள்ளது. அதே தூணில் அம் மகேந்திரனுடைய மகன் ஐயப்பதேவனுடைய சாசனம் ஒன்றிருக்கிறது. கி. பி. 931-ம் ஆண்டு விருபாக்ஷி புரத்தில் அண்ணிகன் மகன் இருள 931-ம் ஆண்டு விருபாக்ஷி புரத்தில் அண்ணிகன் மகன் இருளனுடைய கல்வெட்டு ஒன்று இருக்கிறது. விருபாக்ஷிபுர

மென்பது தர்மபுரியின் ஒரு பாகத்துக்குப் பெயர். அதமன் கோட்டையிலும் நொளம்பருடைய கல்வெட்டு உண்டு.

ஆகவே, தகடூரில் நொளம்பர்கள் நான்கு தலைமுறைகளாக ஆண்டனர் எனலாம். (1) மகேந்திரன் (2) அவன் மகன் ஐயப்பன் (3) அவன் மகன் அண்ணிகன் (4) அவன் மகன் இருளன் என்பார்கள். நொளம்பர்களிற் கடைசியாக ஆண்ட மன்னன் அண்ணிகனுடைய தம்பியான திலீபரசன் என்பவன். விருபாக்ஷிபுரத்துக் கல்வெட்டினால் நொளம்பர்கள் கங்கர்களோடு கல்யாண சம்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட செய்தியை அறியலாம். ஐயப்பன் அண்ணிகன் இவர்களுடைய தாய்மார்கள் கங்க வம்சத்து இளவரசிகள். பின்னால் நொளம்பர்களுக்கும் கங்கர்களுக்கும் சம்பந்தம் அற்றுப்போய், கங்கர்கள் பாணர்களோடு உறவு கொண்டார்கள். அவர்களுள் கங்கபாணன் மாரசிம்மன் என்பவன் நொளம்பர் அரசியலைத் தொலைத்தான். அதனால் நொளம்பகுலாந்தகன் என்ற பட்டத்தையும் வகித்துக்கொண்டான்.

மல்லிகார்ஜுனர் ஆலயத்து மகேந்திரன் கல்வெட்டு ஸ்ரீமங்கலத்து வியாபாரி ஒருவனுடைய மக்கள் நிதியண்ணன், சண்டியண்ணன் என்பவர்கள் தகடூரில் ஒரு ஜெயினபஸ்தியை கட்டினதாகச் சொல்லுகிறது. அவர்களுள் நிதியண்ணன் மகேந்திரனிடமிருந்து மூலஹல்லி என்ற ஊரைத் தானமாகப் பெற்றான். பிறகு அவன் வினயசேனனுடைய சிடன் கனகசேனனுக்கு அதனைக் கொடுத்து, பஸ்தியில் பழுது பார்க்கவும், பூஜை செய்யவும் ஏற்படுத்தினான்.

மூல ஹல்லி என்பது தருமபுரிக்கு மேற்கே 9 மைலில் உள்ள மூலக்காடு என்பதாகும். மேலும், ஐயப்ப தேவனால் நிதியண்ணனுக்குப் புதுகூர் என்ற கிராமம் அளிக்கப்பட்டது. 878-ல் எழுதின மாரியம்மன் ஆலயத்துக் கல்வெட்டு ஒன்று ஒரு சைவ ஆசாரியனுக்கு மருதனேரி என்ற ஒரு குளத்தை மகேந்திரன் தானம் செய்ததாகச் சொல்லுகிறது. மற்றும் தகடூரில் சில வியாபாரிகள் ஜெயின பஸ்தியைக் கட்டிச் சில விலைபொருள்களின்மீது கோயிலுக்காக வரிவாங்கினதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டுகளினால் நொளம்பர்கள் ஆட்சியில் தர்மபுரியில் 9-வது நூற்றாண்டில் சைவமும் ஜைனமும் அடுத்து அடுத்து விளங்கின என்று அறிகிறோம். இக்காலத்தில் அந்த ஜெயின பஸ்தி இருந்த இடம் தெரியவில்லை. மைசூர் நாட்டைச் சேர்ந்த நந்தி தூர்க்கத்தில் இருக்கும் போக நந்தீஸ்வரர் ஆலயத்தைப் போல் மல்லிகார்ஜுன ஆலயம் இருப்பதால், இவ்வாலயமும் நொளம்பர்களால் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்று ஆராயப்படுகிறது.

இராமக்கா குளத்துக் கரையில் உள்ள ஒரு பலகைக் கல்லில் ஒரு கன்னடச் செய்யுள் செதுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் நொளம்பர்கள் காலத்தையதாய் இருக்கலாம். அது தகடூரை அடியில் கண்டபடி வருணிக்கிறது. "தகடூர் உலகத்தினுடைய பிரதி பிம்பம்; ஏனெனில் அதில் சைவாச்சாரியன் வித்தராசியும் காளி-சோமேஸ்வரர், பல்ல வேஸ்வரர், பெரிய போகேஸ்வரர், உன்னதமும் களங்கமுமில்லா நன்னேஸ்வரர், புகழ்பெற்ற காஞ்சி புஜங்கேஸ்வரர் முதலிய ஆலயங்களும், பிரகாரங்களும் சிங்கம்போலச் சக்திவாய்ந்த அரசர்களின் உல்லாச நிலங்களும் இருக்கின்றன."

சோழவம்சத்து ஆட்சியில் தகடூர் நாடு என்பது கங்கர் நாட்டின் ஒரு பாகமாக யிருந்தது. அது நிகரிலி சோழ மண்டலம் என்பதில் அடங்கியிருந்தது. தகடூர் நாட்டில் புறமலை நாடு என்பது ஒரு பாகமாக இருந்தது. சோழர்கள் காலத்திலும் அதிகமான் என்ற பட்டத்தை அவர்களுடைய பிரதிநிதிகள் இட்டிருந்தார்கள். விஷ்ணு வர்த்தனன் தலைக்காட்டிலிருந்து சோழர்களைத் துரத்தினபோது சோழர்கள் சேனையின் தலைவன் ஒருவன் அதிகமான் என்ற பெயருடையவனாக இருந்தான். ஆனால் இவ்வூரில் சோழர்களுடைய கல்வெட்டுகள் அதிகமாக இல்லை. அவர்களுடைய கண்காணிப்பும் குறைந்திருக்கலாம். காமாட்சி ஆலயத்தின் தென்புறச்சுவரில் கி. பி. 1188-ம் ஆண்டு குலோத்துங்கன் III என்பவன் கல்வெட்டு ஒன்றும், கீழ்புறச்சுவரில் அவனது 12-வது ஆண்டு கல்வெட்டு ஒன்றும் இருக்கின்றன. அவைகளில் இரண்டாவது அதியமான் பொருட்டுச் செய்த தானமாகும். அந்த அதியமான் வாகன் என்கிற ராஜ ராஜன் அல்லது அவன் மகன் விடுகாதழகிய பெருமாள் என்பவனாயிருக்கலாம். இவன் சேரவம்சத்தானென்றும், எழினியைப் போன்று தானும் ஆண்டான் என்றும் சொல்லிச் சுயேச்சை அதிகாரம் பூண்டு தர்மபுரியைத் தலைநகராக்கிக் கொண்டு சிறந்திருந்தான்.

ஆனால் இம்மன்னன் வெகுநாள் நிலைக்கவில்லை. ஏனெனில் உடனே ஹொய்சளர்கள் இந்நாட்டைப் பிடித்துக்கொண்டனர். மூடூரில் உள்ள ஒரு சாசனத்தில் ஹொய்சள மன்னன் விஷ்ணு வர்த்தனனைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. இவ்வூரில் 1331-வது ஆண்டில் ஏற்பட்ட மற்றொரு கல்வெட்டு ஒன்று உண்டு.

பிறகு வந்தவர்கள் விஜய நகரத்து அரசர்கள். அவர்களில் தேவராயர் II (1430—1440) மல்லிகார்ஜுனன் (1476) இவர்கள் காலத்துக் கல்வெட்டுகள் கிடைத்தன. கடைசியாக ஜெகதேவராயனுடைய இரண்டு கல்வெட்டுகளில் ஒன்று குளக்

கரையைப் பலப்படுத்தினதும் விருபாக்ஷிபுரத்தைப் பிராமணர்களுக்குக் கொடுத்ததும் கண்டிருக்கிறது. அவைகளில் முதலாவது 1622-ல் குமாரஜெகதேவனுக்காகவும் இரண்டாவது 1619-ல்இம்மடி ஜெகதேவராயனுக்காகவும் ஏற்பட்டவை.

தர்மபுரியில் இராணுவ மேம்பாடு எக்காலத்திலும் இருக்கவில்லை. 17-வது நூற்றாண்டில் பீஜபூர் முகமதிய மன்னன் அதைப் பிடித்துக் கொண்டான். பிறகு 1652-ல் மைசூர் கண்டீரவ நரசராஜன் அதைத் தன் வசப்படுத்திக் கொண்டான். பிறகு சிலநாள் அவன் கைவிட்டு விலகி விட்டது. பின்னும் 1688-ல் சிக்க தேவராயன் அதனைப் பிடித்தான். 1768-ல் ஆங்கிலர் இதை முற்றுகையிட்டுத் தாக்கினர். 1792-ல் இஃது ஆங்கிலயர் வசம் வந்தது.

வடிவுதிருந்த அறிவு வளர்ந்தவகை

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர்—

திரு. க. ப. சந்தோஷம் B.A.,L.T.]

(௧௪௫-ம் பக்கத் தொடர்ச்சி)

(முன் கண்டவை:— உயிர்வகைகளை அறிவின் வளர்ச்சிக்கேற்ப ஒழுங்குசெய்து பார்க்குங்கால் புணர்ச்சிக்கருவியின் அளவு சுருங்குகின்றது; கால்களின் தொகை குறைகின்றது; வயிறு சிறுத்துத் தோன்றுகின்றது. மக்களில் இவ்வுறுப்புக்கள் சுருங்கியிருப்பதால் மக்கட்பிறவிக்கு மேற்பட்டபிறவியுண்டாயின் இவைமேலும் சுருங்கித் தோன்றவேண்டும் கடவுளென ஒன்றிருப்பின், அதற்கு இவை இரா. புணர்ச்சிக்கருவி, கால், வயிறு, கை ஆகிய இவற்றை நீக்கிய பின் எஞ்சிநிற்பது தலை. தலைக்கும் உடலுக்குமுள்ள வேற்றுமை. மரம், செடி, கொடிகளில் தலை நிலத்திற்குக் கீழே இருக்கின்றது.)

வடிவிற் கேற்ப அறிவும், அறிவிற்கிசைய வடிவும் அமைந்திருப்பதைப் பல வகைகளில் அளந்து காட்டுதல் கூடும். அறிவென்ற சொல்லை இங்கே மிக விரிந்த பொருளிற் கொள்ள வேண்டும். ஒழுக்கம், இணக்கம், விழைவு முதலிய பல பகுதிகள் இதிலடங்கி யிருக்கின்றன. நாகரிகம் என்று நாம் சொல்லுகின்ற ஒன்றும் இதின்பாற்படும். ஈண்டு, இவற்றை எல்லாம் எடுத்துக்கொள்ளாது அறியுந்திறம் என்ற ஒருபகுதியை மாத்திரம் கருதுவோம்.

தலையை நிலத்தில் ஊன்றிக்கொண்டு மரங்கள் நிற்கின்றன என்று முன்னரே மொழிந்தேன். தலை நிலத்தால் மூடுண்டு மறைக்கப் படுகின்றது; உடல் முழுமையும் வெளிப்பட்டுத் தோன்றுகின்றது. உடலினும், புணர்ச்சிக் கருவிகளே காட்சியை ஈர்க்குந் தன்மையனவாய் வெளிப்படுகின்றன. இவ்வமைப்பு மரத்திற்கு இன்றியமையாதது. ஏனெனில், மரங்கள் காய்த்துக் கனி தருவதற்கு அவற்றின் மலர்களிலுள்ள தாது இடம் பெயரவேண்டும். மலர்களில் ஆணும் பெண்ணு முண்டாதலால், ஆண்மலரிலுள்ள தாது பெண்மலரிற் பட்டாலன்றிக் கரு வளராது. இப்புணர்ச்சியை மரங்கள் தாமே நிகழ்த்திக் கொள்ளுமாறில்லை. தேனீக்கள், வண்டுகள் முதலியவை ஒரு மலரிலிருந்து மற்றொரு மலருக்குச் சென்று ஆண்பெண் மலர்களின் தாதுக்களைக் கலக்கச் செய்கின்றன. தேனீக்களையும் வண்டுகளையும் ஈர்ப்பதன் பொருட்டு மரங்களிலுள்ள மலர்கள் அழகிய நிறங்களுடனும் இனிய மணங்களுடனும் முற்பட்டுத் தோன்றுகின்றன. இஃதறிவியலிற் கண்ட உண்மை. பூக்களாகிய தன்னுடைய புணர்ச்சிக் கருவிகளை ஒரு மரம் மறைத்து வைத்திருக்குமாயின் எவரும் அம்மரத்தைக் கண்டு மகிழமாட்டார். யாவருங் காண அவை வெளிப்பட்டு நிற்கும் போதன்றோ நாம் மகிழ்வடைகின்றோம்! இதை ஊன்றிப் பார்க்கும்பொழுது, கீழ்நிலையிலுள்ள உயிர்களில் அழகென நாம் மதிப்பது மேல்நிலையிலுள்ள உயிர்களுக்கு வெட்கத்தைத் தோற்றுவிப்பதாகின்றது என்பது விளங்கவில்லையா?

தமிழர் யாவரும் எளிதிலறிந்து வழங்கும் ஒரு சொற்றொடருண்டு. “ஏன் தலை கீழாய் நிற்கிறாய்?” என்பது அச்சொற்றொடர். மேல் நாம் கூறிய உண்மைக்கு இஃதொரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இது பற்றிய மிகத் திருத்தமான கருத்துக்கள் தொல்காப்பியப் பொருளதிகாரத்திலுண்டு. விவரங்கள் கூறப்படா விடினும் தலையாய பகுதிகள் ஆண்டு விளக்கப்பட்டிருக்கின்றன.

உயிர்வகைகளின் ஒழுங்கில் அடுத்தபடியில் வருகின்ற புழுக்களை இப்பொழு தெடுத்துக் கொள்வோம். மரத்தை விடப் புழு உயர்ந்தது. நாகரிகத்தில் மரத்தை விடப் புழு மேனிலையிலுள்ளது. புழுக்கள் தாமே கூடுந் திறமையுடையன. மரங்கள், தம்மோடு நேரான தொடர்பில்லாத வண்டுகளின் துணைகொண்டு புணர்ச்சி நிகழ்த்திக் கொள்கின்றன. நாகரிகத்தில் புழுவின் ஏற்றமும், மரத்தின் தாழ்வும் இதனால் நமக்குத் தெரிகிறது. மரத்தின் அறிவை இது கொண்டு அளந்து கொள்க.

நிலைத்திணை உயிர் ஆசிரியர்கள் சிலர், மரஞ் செடி, கொடி ஆகிய இவற்றில், கொடி மிகத் தாழ்ந்தது என்று கருதுகின்றனர். இதை யான் ஏற்றுக் கொள்ளேன். தொட்டாற்சிணுங்கியைப் பார்ப்போமாயின், தீண்டுதலை யுணருந் தன்மை யதற்குண்டென்பதை யறிகின்றோம். மரத்திற் கிவ்வுணர்ச்சி யில்லை. மற்றொரு தன்மையுங் கொடிகளுக்குண்டு; முளைக்கின்ற ஒரு கொடியின் மீது ஒரு பானையைக் கவிழ்த்து, அப்பானையின் ஒரு மூலையில் துளை யொன்று செய்வோமாயின், துளையின் வழியே கொடி தன் நரம்புகளை நீட்டுகின்றது. மரஞ் செடி கொடிகளைப் பற்றியவற்றை இத்துடன் நிறுத்தி வேறு உயிர் வகைகளை ஆராயப் புகுவோம்.

புழுக்களிலும், அவற்றிற்குமேற்பட்ட உயிர் வகைகளிலும் நாம் காணும் ஓர் அமைப்பு யாதெனில், இவை யெல்லாவற்றிலும் தலை முன்னே இடம்பெற, உடல் அதனோடு பிறகே பொருத்தப்பட்டிருக்கிறது என்பதே. மரத்தில் தலை கீழ் நிற்க, உடம்பு அதற்குமேல் அமைந்திருக்கிறது. நாம் ஒவ்வொரு நாளும் பார்க்கின்ற விலங்குகளிலொன்றை எடுத்துக்கொள்வோம். பன்றி மிக நல்ல எடுத்துக்காட்டாகும். பன்றியின் தலை நிலத்தை நோக்கிச் சாய்ந்ததாயிருக்கின்றது. ஒருவன் அதனருகே வந்து உதைக்குந் துணையும் அவனைக் காணாத வண்ணம் அதன் பார்வை கீழ் நோக்கியிருக்கின்றது. மற்றும், அதைத் தூண்டினாலன்றி அதுமேலே பார்க்காது.

இதிலிருந்து ஒரு படி உயர்ந்த கழுதையைக் கருதுவோம். இதற்கு மேல்நோக்குந் திறமையுண்டு. ஆயினும் மிகக் குறைந்த அளவிற்றான் கழுதை அவ்வாறு செய்யமுடியும். குதிரை நிமிர்ந்து பார்க்கக்கூடிய அளவு கழுதை நிமிராது. பன்றியைவிடக் கழுதையும், கழுதையைவிடக் குதிரையும் அறிவினுயர்ந்தன. நிலைத்திணை உயிர்களில் புதையுண்டு கீழிருந்த தலை, புழுக்களிலும் விலங்குகளிலும் வெளிவந்து உடலுக்கு முன்னே இடம் பெற்றிருக்கக் காண்கிறோம்; இங்ஙனம் நிலத்திலிருந்து வெளிப்பட்டு, விலங்குகளில் முன்னே இடம்பெற்ற தலை, தான் முதலிலிருந்த நிலத்திற்கு நேரே பார்வையுடையதாயிருக்கிறது. எந்த அளவிற்குத் தலை நிலத்திலிருந்து தூக்கப்பட்டிருக்கின்றதோ அந்த அளவிற்கு அறிவும் பெருகியிருக்கக் காண்கின்றோம். ஆதலின் இது எண்ணளவை முறைக்குட்பட்டது. தலையுமுடலும் பொருந்தும் பெறும் முட்க்கி (Angle) மாறிக்கொண்டே வருகிறது. குரங்கில் அது ஏறக்குறைய மக்களில் நாம் காணும் நிலையிலிருப்பதால், குரங்கினறிவு விரிந்துளது. மக்கள் நிலையில் உட

லுக்கு மேலே தலை அமைந்திருக்கின்றது. புல்லிலிருந்து மக்கள்நிலை எய்தும் பொருட்டுக் கீழ்நோக்கிப் புதையுண்டிருந்த தலை, சிறிது சிறிதாக நிமிர்ந்து 180 திக்கிரி (Degree)



மரம். புழு. பன்றி குரங்கு. மனிதன்.

உயர வேண்டியதாயிற்று. இதன் பொருளென்னவெனின், அறியாமையிலிருந்து நல்லறிவு பெற்றிலங்குதற்குத் தலை கீழாய் நிற்கும் நிலையிலிருந்து தலை மேலாக அமையப்பெறும் நிலைக்கு உயிர் வரவேண்டியதாயிற்று என்பதாகும். இந்த நிலையை மக்கள் எய்தியிருப்பதனால், இதற்குமேல் ஒன்றுங் கிடையாதென நாம் கருதுதல் கூடுமோ? எண்ணளவை முறைகொண்டு நோக்குமளவில், மக்கள் வளர்ச்சியில் பாதியளவே நாம் உயர்ந்திருக்கிறோம்; இன்னும் பாதியளவு நாம் உயர வேண்டியிருக்கிறது, என்று கருதக்கிடக்கின்றது.

ஐயன்மீர், மறுபடியும் நாம் பன்றியை நோக்குவோம். இயற்கை யுணர்ச்சியா லுந்தப்பட்டுப் பன்றி என்ன செய்கிறது? உயிரின் வளர்ச்சியிற் புதையுண்டிருந்த தலை வெளிப்பட்டதென்று கண்டோம். பன்றியின் வடிவில் தலை சற்றே வெளிப்பட்டு நிற்கிறது. இங்ஙனம் வெளிப்பட்ட தலையைப் பன்றி மறுபடியும் நிலத்தில் நுழைக்கப் பார்க்கின்றது! அது தலையால் நிலத்தைத் தோண்டுவதை அறியார் யார்? நிலத்தில் தலையை நுழைப்பதற்கு அதற்குக் கற்றுக் கொடுத்தவர் யார்? உள்ளெழும் ஓர் உணர்ச்சியினாலேயே அஃது அவ்வாறு செய்கின்றது.

அடுத்த படியாக எலிகளைப் பார்ப்போம். பிளேக் (Plague) என்ற கொள்ளை நோயைப் பரப்புகின்ற எலிகள் பன்றியைப் போன்றனவே. பன்றியைப்போல் எலிகள் தலையை நிலத்திலிருந்து அத்துணை மேலெடுக்கவில்லை. இது பற்றி அவை பன்றியைவிட நிலத்தோடு மிகக் கேண்மையுடையனவா யிருக்கின்றன. அவை வளை தோண்டி நிலத்திற்குள் வதிவதால் இஃதறியப்படும்.

மரம் தன் தலையை மண்ணிற்குள் தீதணுகா வண்ணம் மறைத்து வைத்திருப்பது போல் வேறு சில உயிர்களுஞ் செய்ய முயல்கின்றன. தீக்கோழி என்று ஒரு பறவை யுளது. (இது பறவையாயினும் பறந்து செல்லும் ஆற்றலற்றது. மிக விரைந்து ஓடக்கூடியது. ஈண்டு இக்கோழியைப் பற்றிக் கூறப்படுவது மேலை நாட்டுப் புலவர் பலரால் ஆளப்பட்டிருப்பினும், ஐயத்திற் கிடமானது). இதை நெடுந்தூரம் துரத்தினல், தப்பிச் செல்வதரிதென்று இதற்குத் தோன்றுமாயின், தலையை மண்ணிற்குள் அது நுழைத்து விடுகிறது. இஃதோருணர்ச்சியாற் பிறக்குஞ் செய்கையாகும்.

மக்களிலும் இத்தகைய உணர்ச்சி யுண்டோ? ஆம். நமது பிழைகள் வெளிப்படுத்தப் பட்டு நாம் வெட்கத்தில் மூழ்குங்கால் என்ன செய்கிறோம்? தலையை நாம் தொங்க விடுகின்றோம். பன்னெடுங் காலத்திற்குமுன் நாம் நமது தலையை மண்ணிற்குள்ளிருந்து வெளியே எடுத்திருக்க வேண்டும். ஏன் இதைச் சொல்லுகின்றேன் என்பதை இங்கு யான் விளக்கப் போவதில்லை. நிற்க.

உளத்தில் நமக்குப் பெருமிதந் தோன்றும் பொழுது நாம் யாது செய்கின்றோம்? பெருமித மடையுங்கால் 180 திக்கிரி நிமிர்ந்த நமது தலையை அதற்குமேல் முதுகெலும்பு இடந்தரும் வரையில் நாம் நிமிர்த்துகின்றோம். தமிழில் வழங்கும் ஒரு சொற்றொடர் இதை நன்கு விளக்குகிறது. "அவன் இப்பொழுது நிமிர்ந்தாற்போல் நடக்கின்றான்" என்பது அது. வெற்றி யடைந்தவன், பிறரினுந் தன்னை உயர்ந்தவனாகக் கருதுகின்றானதலின், தலையை நிமிர்த்தி நடக்கிறான்.

நாம் ஒன்று மில்லாமையி லிருந்து அல்லது அறியாமையிலிருந்து வர வரத் தலையைத் தூக்கி, அதை நிமிர்ந்த நிலைக்குக் கொண்டுவக்தது மன்றி, அதை விண்ணிற்கு நேரே உயர்த்தவுஞ் செய்கின்றோம். ஆனால் உளமோ, அறிவோ சோர்ந்து போகுங்கால் தலை இறங்குகின்றது. வணக்கத்தில் நமது தலை இருக்கும் நிலை என்ன? பெருமிதமும் பெருமையும் நீங்கிய இந்நிலையில் தலை நிமிர்வதில்லை. வழிபாட்டில் எல்லா மக்களும் தலை வணங்கிய நிலையை எய்துகின்றனர். நாம் எடுத்துக்கொண்ட பொருளில் இஃதோர் இனிய பகுதி யாதலால், இத்துடன் நிறுத்துகின்றேன்.



சிவஞானபோதக் கருத்து

[திரு. மா. வே நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

பதிப்புரிமை ஆக்கியோற்குரியது

(முன் ௨0௯-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவது சூத்திரம், ஐந்தாம் அதிகரணம்

21. கனவிடத்தின் கண்ணன்றித் தொழிற்படாத நுண்ணுடல் (சூக்கும தேகம்) போலன்றிச் சுழுத்தி துரியங்களிலும் தொழிற் படுவதாகிய பிராணவாயுவே அடங்குதல் விடுதல் செய்து அறிவதாகிய ஆன்மா என்று கூறும் பிராணான்மவாதி கொள்கையை மறுத்தற்கு எழுந்தது இவ்வதிகரண மேற்கோள்.

இனிக் கண்படி லுண்டிவினையின்மையில் ஆன்மா உளது என்பது நூலிற் கூறப்பட்ட மேற்கோள். கண்படில் = கனவு நிகழாத துயிலிடத்து; உண்டி = விடயங்கள் வாயிலாக நுகரப்படும் இன்ப துன்ப நுகர்ச்சி; வினை = பரு உடல் (தூலதேகம்) தொழிற் படுதல். விடயங்களிடமாக நுகரப்படும் இன்பதுன்ப நுகர்ச்சியும், பரு உடல் தொழிற் படுதலும் ஆன்மாவுக்குக் கனவு நிகழாத் துயிலின்கண் இலவாதலால் பிராணவாயுக்கு வேறாய் ஆன்மா உண்டு என்று ஆசிரியர் இவ்வதிகரணம் மேற்கோளைக் கூறுகின்றார்.

22. ஆசிரியர் கூறும் மேற்கோளின் கருத்து அடியில் வருமாறு விளக்கிக் கூறப்படும்:—பிராணவாயுவானது ஆன்மாவினுடைய நனவு (சாக்கிரம்), கனவு (சொப்பனம்), நிலை (அவத்தை) களிலன்றி சுழுத்தி துரிய நிலைகளிலும் இயங்குகின்றது. ஆனால் நனவு நிலையில் மாத்திரம் ஆன்மாவுக்கு விடயங்களினிடமாக வரும் இன்ப துன்ப நுகர்ச்சியும், பரு உடல் (தூல தேகம்) தொழிற் படுதலும் (சேட்டித்தலும்) நிகழ நாம் காண்கின்றோமேயன்றித் துயில் நிகழும் சுழுத்தி நிலையில் காண்பதில்லை. துயிலிடத்துப் பிராணவாயு இயங்கி

னும் இன்ப துன்ப நுகர்ச்சியும், பருஉடல் தொழிற்படுதலும் இல்லனவாதலுக்கு ஏது யாதெனின், ஆன்மா நனவின்கண் பிராணவாயுவைக் கருவியாக விடுத்து ஐம்பொறிகளை இயக்கியும், சுழுத்தி நிலையிலுள்ள துயிலிடத்து அதனை ஒடுக்கி ஐம்பொறிகளைத் தொழிற்படாமலிருக்கவும் செய்து வருதலினலேயாம். ஆதலின் ஆன்மா பிராணவாயுவுக்கு வேறாய் உண்டு என அறிவாயாக.

23. ஆசிரியர் கூறிய அறிவுரையைப் பிராணான்மவாதி கேட்டு அதனை மறுத்துத் தடையுரை கூறுகின்றான்:—உடலிற் பிராணவாயு இயங்குதலினாலே ஆன்மாவுக்கு அறிவு நிகழ்கின்றது. அப்பிராணவாயுவே ஐம்பொறிகளையும் கருவிகளாகக் கொண்டு அறிகின்றது. துயிலின்கண் உடலினிடத்துப் பிராணவாயு இயங்கினும் ஐம்பொறிகளாகிய கருவிகள் ஒடுங்கியிருத்தலால் அது அறியவில்லை; அதனால் பருஉடலினிடத்துப் பிராணவாயுவுக்கு இன்ப துன்ப நுகர்ச்சியும், தொழிற்படுதலும் நிகழவில்லை. மேலும் ஒருவன் துயிலினின்று விழித்தெழுந்தபொழுது அவனுக்கு "நான் சுகமாய்த் தூங்கினேன்" என்ற உணர்ச்சி உண்டாகிறது. அதனால் சுழுத்தியில் இன்ப நுகர்ச்சியும் உளது. ஆதலால் பிராணவாயுவே அறியும் பொருளாகிய ஆன்மாவாயிருத்தலின் அதற்கு வேறாய் ஆன்மா என்ற ஒரு அறிவுப் பொருள் உளது என்று கோடல் பொருந்தாது.

24. பிராணான்மவாதி கூறின தடைஉரையை (ஆக்ஷேபணையை) ஆசிரியர் கேட்டு அவனுடைய அறிவு மயக்கம் நீங்கும்படி கூறும் மறுப்புரையாவது:—பிராணவாயுவானது உடலில் இயங்குகிற தன்மையை நீ நன்றாய் அறிந்து கொள்ளவில்லை. அது ஒரு நிலையில் நின்று இயங்காமல் மேலும் கீழும் மாறிமாறி இயங்குகின்றது. இவ்வாறு அது உடலில் இயங்குதலினாலேயே உடலினிடத்து எல்லாக் கருவிகளும் இயங்குகின்றன. அது இயங்கும் காலத்தில் உடலிலுள்ள கருவிகள் ஒவ்வொன்றும் தாமாக இயங்காமலிரா*. ஆதலின் பிராணவாயு, துயில் நிகழும் சுழுத்தியில் இயங்கும்பொழுது ஐம்பொறிகளாகிய கருவிகள் ஒடுங்கியிருக்கும் என்று நீ கூறிய கூற்றுப் பொருந்தாது. சுழுத்தியில் உண்டாகிறது என்று நீ கூறுகிற சுக உணர்வு நாம் கூறுகிற உண்டிக்குச் சேர்ந்ததன்று. நாம் கூறுகிற உண்டி என்பது புறப்பொருள் விடயங்களினிடமாக வரும் இன்ப துன்ப நுகர்ச்சியாகும். உட

* சிவஞான சித்தியார், மூன்றாவது சூத்திரம், 4வது பாட்டு.

லில் இயங்கும் பிராணவாயுவே அறியும் பொருளாகிய ஆன்மாவாக இருப்பின் அது இயங்குகிற நனவு நிலையிலும், சுழுத்தி நிலையிலும் அறிவு ஒருதன்மைத்தாக நிகழ்தல் வேண்டும். ஆனால் நனவில் அறிவு நிகழவும், சுழுத்தியில் அறிவு நிகழாதிருக்கவும் நாம் அனுபவத்தில் காண்கின்றோம். பிராணவாயு நிகழாத துரியாதீத நிலையில் "நான் சுகமாய்த் தூங்கினேன்" என்ற உணர்வு ஒருவனுக்கு அவன் துயில் நீங்கி விழித்த பொழுது உண்டாகின்றது†. பிராணவாயுவே அறியும் பொருளாகிய ஆன்மாவாயிருந்தால் இந்தச் சுக உணர்வு உண்டாகாது. இந்த ஏதுக்களால் பிராணவாயுவுக்கு வேறாய் ஓர் அறிவுப் பொருள் ஏவலாளன் போல ஒரு தன்மைத்தான நிலையிலிருந்து நனவு நிலையிலே உடலில் இயங்குகிற பிராணவாயுவைப் பணியாளனாக விடுத்து அதனைக் கொண்டு ஐம்பொறிகளை இயக்கி அறிந்தும், விடயங்களிடமாக வரும் இன்ப துன்பங்களை நுகர்ந்தும், பருஉடலைத் தொழிற்படுத்தியும், சுழுத்தியில் பிராணவாயு இயங்கினாலும் அதனை ஒடுக்கி அச்செயல்களை நிகழ்விக்காமலும் செய்தல் வேண்டும். இந்த அறிவுப் பொருளே நாம் உளதென்று கூறுகிற ஆன்மா என்று அறிதி.

காடு

(மறைமலையடிகள்)

காடு—மரங்களடர்ந்த நிலப்பகுதி

வல்லை—பருத்துயர்ந்த மரங்கள் நெருங்கிய காடு.

இறும்பு, குறுங்காடு—சிறு மரங்கள் மிடைந்த காடு.

அரில், அறல், பதுக்கை—சிறு தூறுகள் பம்பிய காடு.

முதை—மிக முதிர்ந்து முற்றிப்போன மரங்களையுடைய காடு.

பொச்சை, சுரம், பொதி—மரங்கள் கரிந்துபோன காடு.

கணையம், மிளை, அரண்—அரசன் காவலிலுள்ள காடு.

† சிவஞான சித்தியார். மூன்றாவது சூத்திரம் முதலாவது பாட்டிலுள்ள சிவஞான சுவாமிகள் உரை.

அறிவியற் பகுதி - Science

ஞாலநூல் (Geology)

[திரு. S. நடராஜன், B. A.]

[பதிப்புரிமை ஆக்கியோர்க்கு]

முன்னுரை

1. மாந்தர் தாம் சிந்திக்கத் தொடங்கிய காலந் தொட்டு, அதாவது, அவர்களின் பகுத்தறிவு வளர்ச்சியுற்ற காலத்திலிருந்து, தங்கள் இருப்பிடமாகிய ஆர்கலி சூழ் ஞாலத்தைப் பற்றி அறிய அவா மிக்குள்ளனர். ஞாலத்தைப் பற்றி எழும் ஐயங்களும் வினாக்களும் பலதிறப் பட்டவையாம். மாந்தர்க்கு ஊண் உடை அளித்து அவர்கள் தோன்றி வளர்ந்து இறுதியுறச் செய்யும் இவ்வுலகைப் பற்றி அறிய ஆசைப்படுவது இயற்கையேயாம். மானிடர் தோன்றிப் பல்லாயிர மாண்டுகளாய் விலங்கென வாழ்க்கை நடாத்தினர். இவ்வாழ்க்கையின் பயனாய் விளைந்த அறிவு முதிர முதிர மக்கள் நாகரிக மெய்தினர். நாகரிகமடைந்த மக்கள் தங்கள் அறிவு வளர்ச்சிக் கேற்ப, இவ்வுலகில் நிகழும் அற்புத நிகழ்ச்சிகளையும், இவ்வுலகின் தன்மையையும் நன்கு அறிய முயன்றனர். இதை அறியவேண்டும் என்னும் உணர்ச்சியே சமயம், குலம் வகுக்கத் தூண்டியது எனலாம். “சண் மதஸ்தாபனமும், வேதாந்த சித்தாந்த, சமரச நிர்வாக நிலையும், வந்தருளு ஞானகுருவே,” எனத் தாயுமானார் திருவாய் மலர்ந்தருளியப்படி நாகரிக மக்களின் வேட்கை அண்டப் பரப்பை அறிய வேண்டுவதேயாம். எனவே மக்கட்குப் பின்வரும் வினாக்கள் தோன்றுகின்றன. இவ்வுலகு எவ்வெப்பொருள்களால் ஆக்கப் பட்டுளது? எப்பொழுது, எப்படி இஃது தோன்றியது? தோன்றிய காலமுதல் இற்றைவரை என்ன மாறுதல்கள் அடைந்துளது? இவ்வுலகில் தோன்றி வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற உயிர்களின் வகை தொகை எவ்வளவு? இதின் மேற்பரப்பில் நடந்துவந்துள்ள நாடகத்தில் மானிடர் என்ன பங்கு எடுத்துக் கொண்டிருக்கின்றனர்? இத்தகைய வினாக்கள் மக்கள் கூட்டத்தில் எழுந்ததன் பயனாய்ப் பல்வகைப் புராணங்களும் ,சமய சாத்திரங்களும் தோன்றியுள்ளன. மேனாடுகளில் பிதாகோரஸ், அரிஸ்ட்டாட்டில் போன்ற அறிஞர்களும், நம் நாட்டில் மணிவாசகர் முதலிய சமயகுரவர்களும், நந்தமிழ்ச் சங்கமேறித் தமிழாய்ந்தாரும் இவ்வுண்மையை அறிய முற்பட்டிருக்கின்றனர்.

உண்மை ஒருவாறு இப்பண்டைப் பெரியார்க்குப் புலப்பட்டதெனினும் இந்நாளில் இஃது ஞாலநூல் அறிஞர்களால் அதிநுட்பமாயும், விரிவாயும், விளக்கப்பட்டு வருகிறது. ஆராய்ச்சியாளர்களால் 18-ம் நூற்றாண்டில்தான் ஞாலநூல் தனிநூலாகக் கருதப்பட்டது. இஞ்ஞான்று இஃது ஏனைய தனிநூல் (exact sciences)களுடன் ஒன்றாய்த் திகழ்கின்றது. ஜெர்மானியரும், அமெரிக்கரும், பிரான்சியரும், ஆங்கிலேயரும் இந்நூலில் ஏராளமான புத்தகங்கள் வெளியிட்டுள்ளனர். இப்புத்தகங்களை வெளியிட்டுள்ள ஆசிரியர்கள் மிகுந்த பொருட் செலவில் தாங்களே நேரில் பல இடங்களுக்குச் சென்று பார்வையிட்டும் புகைப்படங்கள் எடுத்தும் அவைகளைத் தங்கள் புத்தகங்களில் சேர்த்து அழகுற எளிதில் கற்போர் மனதைக் கவரக்கூடிய வகையில் வெளியிட்டுள்ளனர். இந்திய அரசாங்கத்தார் இதற்கென ஒரு தனி அலுவற்றுறை வைத்திருந்தும் நம் நாட்டவர் இதில் கலந்து தனியாக ஆராய்ச்சி செய்யப் போதிய வசதியுமில்லை; ஆராய்வாரும் கிடைப்பது அருமையாகிறது. பலவிதமான இடையூறுகளினிடையே இஞ்ஞால நூலைச் சிறிதேனும் தமிழர் உணர வேண்டும் என்னும் ஆசையால் நஞ்செல்வி மூலம் இச்சிறியேனின் (புத்தக) ஆராய்ச்சியைத் தொகுத்து “மூங்கையான் பேசலுற்றான் என்ன யான் மொழியலுற்றேன்.” இறைவனருள்கூடின் பின்னர் நேரில் பலவிடங்கள் சென்று ஆராய்ந்து படங்களுடன் தனிப் புத்தகம் வெளியிட ஆசைமிக்குள்ளேன். ஈண்டு ஞால நூலின் எல்லைக் குறிகளை மட்டும் குறிப்பிடுகின்றேன்.

2. பண்டை வரலாற்று ஆராய்ச்சிக்கு ஞால நூல் உறுதுணையாகின்றது. நாகரிகம் வாய்ந்த ஒவ்வோர் நாட்டினரும் இந்நூல் உதவியால் தங்கள் தங்கள் நாடு உலகந் தோன்றிய காலமுதல் இன்றுவரை அடைந்துள்ள மாறுதல்களை உணர்ந்து வரலாற்றைத் தொகுக்கின்றனர். ஏனையோரைக் காட்டிலும் நந்தமிழ் நாட்டார் இந்நூலை ஊன்றிப்படித்தல் வேண்டும். உலகின் மேற்பரப்பில் தற்காலம் உள்ள ஏனைய நாடுகள் கடலினுள் இருந்தகாலத்திலும் தமிழ் நாடு நிலமாய் இருந்துளது. ஞாலம் தோன்றியது முதல் இற்றைவரை இதற்கு நான்கு கடற் பெருவெள்ளங்கள் நிகழ்ந்துள்ளன. இந் நான்கு காலங்களிலும் நிலப்பரப்பு மாறி வந்திருக்கின்றது. ஆனால் நந்தமிழ் நாடு மட்டும் நிலை பெயராது நான்கு ஊழிகளையும் கண்டுள்ளது. இதன் தொன்மையை அறிந்து நாம் பெருமை அடையவேண்டும். நந்தமிழ் நாட்டுப் பண்டைச் சரிதத்தைச் சரியாக ஆராயும் நாவலர்கட்கு இந்நூலறிவு சாலவும் இன்றியமையாததாம்.

3. பல நாடுகளின் வரலாறுகளில் உண்மை சிற்சில இடங்களில் திரித்துக் கூறப்பட்டுளது. போரில் வெற்றிபெற்றவர்கள் உண்மைக்கு மாறாய்த் தங்களைப் பெருமைப் படுத்தியும் தோல்வியுற்றவர்களை இழிவு படுத்தியும் எழுத முற்பட்டு விடுகின்றனர். வரலாறுகளில் ஆங்காங்கே இத்தகை இழுக்கு இருத்தல் வருந்தத் தக்கதே. ஒரு நாட்டுச் சரித்திரத்தை எழுதும் சரித்திர ஆசிரியர் தமக்கு வேண்டிய சான்றுகளை அந்நாட்டு மக்களிடம் கேட்டும், நேரில் கண்டும், பிறர் எழுதிய குறிப்புக்களைக் கொண்டும் தெரிந்து எழுதுகின்றனர். உலகின் வரலாற்றைத் தொகுக்கும் ஞாலநூல் அறிஞர் பிறரின் சான்றுகளைக் கொண்டு எழுத வேண்டியதில்லை. கானயாறும், கடுஞ்சுரமும், கற்குன்றும், மலைகளும், கடற்கரைகளும், பள்ளத்தாக்குகளும், சமவெளிகளும் சரித்திரச் சான்றுகளை அளிக்கின்றன. மலைகளும், காடுகளும், பாறைகளின் அடிப்படைகளும் இவ்வுலகின் வரலாற்றைத் தெளிவு படுத்துகின்றன. ஆகையால் ஒரு நாவலரின் நாட்டுப் பற்றோ, மத வெறியோ, பண வேட்கையோ இந்நூலைத் தம் மனதிற்கேற்றவாறு திரித்துக்கூற இடந்தராது. எனவே, இது பண்டை வரலாற்றை அறிய ஒரு பெருந் துணையாகிறது.

4. இந்நூலை இருபெரும் பகுதிகளாய்ப் பிரிக்கலாம். ஒரு பகுதி ஞாலம் எவ்வெப் பொருள்களால் அமைக்கப்பட்டுளது என்பதையும், அவைகளின் தன்மையையும் கூறா நிற்கும். இப்பகுதியில் ஞாலத்தின் மேற்றோடு, உட்பாகம் ஆயவை எவ்வாறு அமைக்கப்பட்டுளது எனவும், கடல், ஆறு, மலை, எரிமலை, பூமியதிர்ச்சி, காற்று மழை, கால நிலை மாறுபாடு முதலியவைகளைப் பற்றியும் விளக்கப்பெறும். மற்றொரு பகுதியில் ஞாலத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும், ஊழி முடிவுகளையும், அவ்வக்காலங்களில் வாழ்ந்து வந்த உயிர்களின் வரலாறுகளைப் பற்றியும் கூறப்படும். எனவே இந்நூல் கற்போர்க்கு உற்சாகமளித்துப் புதுப் புதுப் பொருள்களைத் தெளிவுபடுத்தி ஊக்கமூட்டும்.

5. இந்நூலுக்கு இலக்கணம் (Definition) பின் வருமாறு கூறலாம். ஞாலத்தின் உற்பத்தி, அமைப்பு, அதன் மேற்பரப்பில் உள்ள நிலநீர்ப் பகுதிகளின் தோற்றம் மாற்றம் முதலியவைகளையும், இதன் வரலாற்றையும், இதில் தோன்றி வாழ்ந்து வரும் புல் பூண்டுகள், மரங்கள் உயிர்கள் முதலியவைகளின் வரலாறுகளையும் பாறைகளின் அடிப்படையிலும், நிலத்தின் அடிப்படைகளிலும் கிடைக்கும் சான்றுகளால் ஆராய்ந்து கூறும் நூல் ஞாலநூல் எனப்படும்.

உளநூல் (Psychology)

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

(உஉஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்மையியல் (Personality)

இனித் தன்மையின் அமைவின்மைகளை அமைவு படுத்துமாறு அறிவாம். தன்மையின் சிதைவுகளை அமைவு படுத்தும் முறைகளைக் கூறும் நூல் ஆங்கிலத்தில் ஸைகோ தெராபி (Psycho therapy) எனப்படும். இதனைத் தமிழில் உளமருத்து நூல் எனக் கூறலாம். உளமருத்துவத்தில் நாம் நான்கு அறியத்தக்கன இரண்டு உள. தன்மைச் சிதைவுள்ளவனது முழு உள வாழ்க்கையின் வரலாற்றை அறிந்து, அச் சிதைவு நேர்ந்ததன் காரணத்தைத் தெரிதல், ஒன்று: தன்மைச் சிதைவினனது நிகழ்கால உளப்பான்மையின் அமைப்பை நன்கு அறிந்து, அதை வருங்காலத்தில் சீர்படுத்தும் முறைகளை ஆராய்ந்து தெளிதல், பிறிதொன்று.

உளமருத்துவ முறைகள் பல உள. அவையிற்றுள் சிறந்தன சில. அவை ஆங்கிலத்தில்,

1. ஸஜ்ஜெஷன் (Suggestion)
2. ஹிப்னடிக் ஸ்ஜ்ஜெஷன் (Hypnotic Suggestion)
3. ஆட்டோ ஸஜ்ஜெஷன் அல்லது ஸெல்ஃப் ஸஜ்ஜெஷன் (Auto-Suggestion or Self-Suggestion)
4. கௌண்டர் ஸஜ்ஜெஷன் (Counter Suggestion)
5. ஸைகோ அனலிஸிஸ் (Psycho-analysis)

எனப் பேசப்படுகின்றன. தமிழ்மொழியில் இவை முறையே,

1. எண்ண ஏற்றம்
2. அறிதுயில் சார் எண்ண ஏற்றம்
3. தற்செய் எண்ண ஏற்றம்
4. எதிர் எண்ண ஏற்றம்
5. உள ஆராய்வு

எனப் பேசப்படும்.

எண்ண ஏற்றம்

ஒருவன் ஒருவினை செய்யுங்கால் பல்வகைச் சார்புகளால் உளத்தளர்ச்சி அடைகின்றான். இந்நிலையை அவனால் நன்கு மதிக்கப்பட்டவன் ஒருவன் கண்டு அவனை நண்ணி 'இவ்வினையை மீண்டும் வலிதின் முயன்று செய்; இம்முறை நீ வெற்றி பெறுவாய்' என வன்புடன் கூறுகின்றான். இக்கூற்றினைக்

கேட்ட முன்னவன் உள்ளத்தில் 'இம்முறை முயன்றால் உண்மையில் வெற்றி பெறுவோம்' என்னும் எண்ணம் ஏற்றம் எய்துகின்றது. இவ்வெண்ண ஏற்றத்தின் பயனாக அவன் தன் வினையை இனிது முடிக்கின்றான். ஒருவனுக்கு எண்ண ஏற்றத்தினால் உண்டாம் பயன் அவ்வெண்ண ஏற்றத்தினைத் தோற்றுவித்தவனது உளவன்மை, செந்தண்மை, பெருமிதம் முதலியவற்றுடன் இயைந்து நிற்கும். இவ்வுண்மையைச் சற்று விளக்குவாம். உலகத்தில் மாந்தரிடை நிகழும் உளத்தொடர்புகளுள் மதிப்பு என்பதொன்று. ஒருவன் பலர்பால் மதிப்பினைக் கொண்டுள்ளான் எனக் கொள்வோம். ஆயின் அவற்கு அப்பலர் மாட்டும் ஒரே அளவினதாய மதிப்பு நிலைப்பதில்லை.

ஒருவர் மாட்டு ஒரு பகுதி மதிப்பினைக் கொண்டுள்ள அவன் மற்றொருவர் மாட்டு இருபகுதி மதிப்பினைக் கொண்டவனாக இருப்பன்: பிறிதொருவர் மாட்டு மூன்று பகுதி மதிப்பினைக் கொண்டவனாக இருப்பன். அவன் உளத்தின்கண் மேற்கூறப்பட்ட மூவருள் முதலவரால் தோற்றுவிக்கப்படும் எண்ண ஏற்றம் இரண்டாமவரால் தோற்றுவிக்கப்படும் எண்ண ஏற்றத்தின் குறைந்த வன்புடையதாகவே இருக்கும்: மூன்றாமவரால் தோற்றுவிக்கப்படும் எண்ண ஏற்றம் இரண்டாமவரால் தோற்றுவிக்கப்படும் எண்ண ஏற்றத்தின் மேற்பட்ட வன்புடையதாக இருக்கும். இது கண்கூடு.

ஆராய்ச்சி அறிவுடையார்க்கு, உலகியல் வாழ்க்கையில், இவ்வெண்ண ஏற்றத்தின்பாற்பட்ட பல நிகழ்ச்சிகள் நன்கு புலனாம். நல்லாசிரியர்கள் தம் மாணாக்கர்களைக் கல்வியறிவொழுக்கங்களிற் றலை சிறந்தவர்களாகப் பழக்கும் முறைகளும், தம் போர் மறவர்களால் மிக்கு மதிக்கப்பட்ட ஏனாதிகள் அம் மறவர்களைத் திண்ணிய வீரர்களாகப் பழக்கும் முறைகளும், ஓவியம் முதலிய தொழில்களில் மிகுந்த ஆற்றல் பெற்றவர்கள் தங்கள் மாணாக்கர்களை அவ்வத்துறைகளில் சிறந்தவர்களாகப் பழக்கும் முறைகளும், உடற்பயிற்சி ஆசிரியர்கள் தம் உடல்மெலிந்த மாணாக்கர்களை வல்லுடலினராகப் பழக்கும் உளச்சார்பான முறைகளும், சீரிய யோகியர் தம் புது மாணாக்கர்களை அத்துறையில் பழக்கும் முறைகளும், சொல்வன்மையிற் சிறந்தவர் தம் நண்பர்களையும் மாணவர்களையும் அத்துறையில் தேர்ச்சி பெறுவிக்கக் கையாளும் முறைகளும் இன்னோரன்ன பிறவும் எண்ண ஏற்றத்தின் பாற்பட்டனவாம்.

எண்ண ஏற்றத்தின் வன்பு அதனைத் தோற்றுவித்தவரது உளவன்மையாதியவுடன் இயைந்து நிற்கும் என முன்னர்க்

கூறினோம். எண்ண ஏற்றத்தின் வன்பு பிறிதொரு சார்புடனும் இயைந்து நிற்கும். அச்சார்பாவது எண்ண ஏற்றத்தை ஏற்பவனது உளப்பான்மையாம். சிலர் எண்ண ஏற்றத்தை எளிதில் ஏற்பவராக இருப்பர்: அவர் உள மென்மை யுடையர். வேறு சிலர் எண்ண ஏற்றத்தை ஒரு காலும் ஏலாதவராக இருப்பர்: அவர் உளவன்மை யுடையர். இனி, ஒருவரே ஒரு நிலையில் எண்ண ஏற்றத்தை எளிதில் ஏற்பர்; பிறிதொரு நிலையில் அதனை வலிதில் ஏற்பர்; மற்றொரு நிலையில் அதனை ஏலாதொழிவர்.

2. அறிதுயில்சார் எண்ண ஏற்றம்

ஒருவன் அறிதுயில் நிலையில் இருக்குஞான்று எண்ண ஏற்றத்தினை எளிதில் ஏற்கின்றான். இஃது உளநூற் புலவர் ஆய்ந்தறிந்த உண்மை. அறிதுயில் என்பது உணர்வு விளங்கும் விழிப்பு நிலைக்கும், உணர்வு விளங்கா உறக்க நிலைக்கும் நடுவண் உள்ள ஒரு தனி உணர்வுநிலை. Hypnosis is a passive and sleeplike state that is nevertheless attentive and concentrated.) இந்நிலையில் உள்ளவனுக்குப் புறவுணர்வு சிறிதும் இன்றெனினும் அறிதுயில் ஏவியின் (Hypnotiser) உள ஆணைகளை (Mental Commands) மட்டும் அறியும் தனி உணர்வு உண்டு. அறிதுயில் நிலையினது உணர்வு விழிப்பு நிலையில் பலபடப் படர்ந்து இருந்தது போலின்றி மிகவும் குறுகி ஒரு புள்ளி அளவிற்கு அஃகும். எனினும், அவ்வளவிற்கு அஃது ஆழ்ந்த தன்மையினதாக நிற்கும். விளக்கிக் கூறுமிடத்து, அறிதுயில் நிலையினது உணர்வின் தொழிற்பாடு அறிதுயிலேவியின் உளவாணைகளை அறிந்து அவையின்படி நடத்தல் என்னும் அவ் ஒரே ஆற்றான் நிகழ்வதெனினும், அந்நிலையில் ஏவியின் மிகவும் நுண்ணிய உள ஆணைகளையும் அறிந்து அவையிற்றின்படி நடத்தலால், அறிதுயில் நிலையினது அஃகிய உணர்வு ஆழம் உடைத்து என்பது போதரும்.

அறிதுயிலேவியின் ஆற்றல்யாவர் மாட்டும் ஒரே அளவினதாகச் செல்லாது. சிலரே எளிதாகவும் விரைவாகவும் அவனது ஆற்றற்கு உட்பட்டு அறிதுயில் நிலையை அடைவர். அவருள்ளும் சிலர் எளிதில் அந்நிலையினின்று நீங்குவர்; பிறசிலர் அந்நிலையினின்று அரிதல் நீங்குவர். இனி, அறிதுயில் ஏற்போனது உடனிகழ் உதவியின்றி அறிதுயிலேவியின் முயற்சி ஒரு சிறிதும் பயன் தாராது என்பதும் ஈண்டு அறியத்தக்கது.

அறிதுயிலைத் தோற்றுவிக்கும் வழிகள் பல. அவையிற்றின் அடிப்படையான படிமுறைகள் கீழ்க் கூறப்படும்.

1. அறிதுயிலேற்பானது உளத்துள்ள பயனற்ற எண்ணங்களை யெல்லாம் அறவே உணர்வு வட்டத்திலிருந்து (from the circle of Consciousness) நீக்கி, ஏற்பு விருப்பு (receptive attitude) என்னும் அமைதி சார்ந்த நிலையினைத் தோற்றுவித்தல் அறிதுயிலேவியின் முதற்றொழில். இஃது ஏற்புநிலை தோற்றுவித்தலாம்.

2. ஏற்பு நிலையைத் தோற்றுவித்த பின்னர் அறிதுயிலேவி செயற்பாலது எண்ண ஏற்றம் புரிதலாம்.

அறிதுயிலினன் மாட்டு எண்ண ஏற்றம் புரிவதால் அறிதுயிலேவி ஆற்றும் வினைகள் இருவகையினவாம். பல்வகை உளநிலைமைகளைத் தோற்றுவித்தல் ஒன்று; சில்வகைத் தொழிற்பாடுகளைத் தோற்றுவித்தல் பிறிதொன்று. முதல் வகையைச் சார்ந்த சில எடுத்துக்காட்டுகளை ஈண்டுக் கூறுவாம். அறிதுயில் இயக்குநன் (Hypnosis - operator) என்னும் அறிதுயிலேவி ஏற்பானது கையில் ஒரு தீ நாற்றமுள்ள பொருளைக் கொடுத்து "இஃது ஒரு நறுநாற்றமுள்ள மல்லிகை மலர்; இதனை நீ முகர்!" எனக்கூறி ஏவுதலும் அவன் அதனைப் பலகாலும் முகர்ந்து இன்பமே நுகர்கின்றான். தன் கையிலுள்ள பொருள் நறுநாற்றமுள்ளது என எண்ணும் உள நிலைமையை ஏற்பானது உளத்தே ஏவி தோற்றுவித்தல் காண்க. நிற்க. ஏற்பானை நோக்கி 'உன் வலக்கை தன் புலனுணர்ச்சியை (Sensation) இழந்து விட்டது. இனி உனக்கு ஊசிக் குத்தினால் நோய் தோன்றாது' எனக்கூறி அவனது வலக்கையை ஊசிகொண்டு பலகால் குத்துகின்றான். ஏற்பான் ஒரு சிறிதும் நோய் நுகராமலே இருக்கின்றான். 'ஊசிக் குத்தினால் இனி நாம் ஒருசிறிதும் நோய் நுகரமாட்டோம்' என எண்ணும் உளப்பான்மையை ஏற்பானிடத்தே ஏவி தோற்றுவித்தல் காண்க.

இனி இரண்டாம் வகையைச் சார்ந்த ஒரு எடுத்துக் காட்டினை ஈண்டுக் கூறுவாம். ஏற்பானது கையில் இயக்குநன் ஒரு அட்டையாற் செய்யப் பட்ட வாளைக் கொடுத்து 'இஃது ஒரு கூரிய எஃகு வாள்; இதனால் உன்னைச் சூழ்ந்து நிற்கும் பகைவர்களைத் தாக்கு' எனக்கூறி ஏவுகின்றான். ஏற்பான் உடனே யாதொரு தயக்கமு மின்றி நாற்புறமும் வாளை வீசி எவரையோ உண்மையில் தாக்குவது போல் முனைந்து முயல்கின்றான்.

(தொடரும்)



குறுந்தொகை

[MR. T. B. KRISHNASWAMY MUDALIAR, M.A., B.L.]

1. கடவுள் வாழ்த்து

தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைக லெய்தின்றா லுலகே.

—பாரதம் பாடிய பெருந்தேவனார்.

2. குறிஞ்சி

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே.

—இறையனார்.

3. குறிஞ்சி

நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.

—தேவகுலத்தார்.

KURUNTHOGAI

OR

COLLECTION OF SHORT LYRICS

The world hath its safety day after day, being protected by Him whose charming feet are as the lotus; whose body has the radiance of red coral; whose raiments are crimson as the carat seed; whose valiant long split spear open the heart of the hills and whose hoisted standard bears the cock as His Emblem!

—*Invocation by Perun-tevanar,*
Author of the Baratham.

II

Oh honey bee, with lovely wings and life amid soft pollen-dust, speak not to please me, but speak the truth and tell me, if of the many flowers ycu visit, there be any more fragrant than the long locks of this maiden, with close-grown teeth, with peacock-grace and capable of much friendly intimacy?

—*Iraiyanar.*

III

Wider than the Earth, higher than the Heavens and deeper than the Ocean, is the love of the Lord whose domain borders on the mountains where, from the small flowers of the black-KURINCHI, the bees build up huge honey-combs.

—*Devakulathar.*

ஜெர்மானியர் கல்வி முறை

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

உலகத்துள்ள பல நாடுகளிலும் வழங்கும் கல்வி முறைகளுள் ஜெர்மனி நாட்டுக் கல்விமுறை சிறந்ததென்று ஆங்கிலேயர்களும் பின்பற்றப் பலகால் முயன்றனரெனில் இம்முறையின் சிறப்பு போற்றத் தக்கதன்றோ ?

சென்ற உலகப் பெரும்போருக்கு முன்னர் வழக்காற்றில் இருந்த ஜெர்மனி நாட்டுக் கல்வி முறை அப்போருக்குப் பின்னர்ப் புதுக்கி அமைக்கப்பட்டது. ஹேர் ஹிட்லரின் ஏற்றத்தின் பின்னர் அம் முறையும் மாறித் தற்போதையை நாட்டு நிலைமைக் கேற்ற ஒரு புதுமுறை அமைக்கப்பட்டிருக்கின்றது.

போருக்குப் பின்னர், 1919ம் ஆண்டில் ஜெர்மனி நாட்டின் அரசியல் அமைப்பு (Constitution) நிறுவப்பட்டது. அவ்வமைப்பின்படி நாட்டின் கல்வி கூட்டரசின்(Federal Government) மேற்பார்வையில் இயக்கப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டது. ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் எட்டு ஆண்டுகளேனும் கல்வி கற்க வேண்டும் என்னும் கட்டாய விதியும் ஏற்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகள் வாக்ஷூலில் (Vokschule) என்னும் பொதுமக்கள் பள்ளிக்கூடங்களில் (Folk schools), மாணவர்கள் பயின்ற பின்னர், தங்கள் பதினெட்டாம் வயதுவரை தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்களில் (Continuation Schools) அவர்கள் பயிலவேண்டும். இவ்விரண்டு பள்ளிகளிலும் மாணவர்கள் இலவசமாகக் கற்பிக்கப்பட்டனர். மிகவும் ஏழ்மையில் உள்ள தந்தையர்கள் தங்கள் மைந்தர்களைப் பள்ளிகளுக்கு அனுப்பாமல் பொருள் வருவாய் கருதித் தொழிற்சாலைகளுக்கும் பிற அலுவற்சாலைகளுக்கும் அனுப்பிவைப்பதை அறிந்த அரசியலார் அவர்கட்குப் பொருளுதவி (Compensation) செய்து அவர்தம் மக்களைப் பள்ளிகளுக்கு அனுப்புமாறு செய்தனர்.

நாட்டின் பல்வகை நலம் கருதி, மாணவர்கள் அற நூல்கள், அறக்கல்வி, தொழிற் கல்வி, முதலியவைகளில் பயிற்றப்பட்டனர். அன்றியும் ஒவ்வொரு மாணவனுக்கும் குழுநலத்தைப் பேணுமுணர்ச்சி தோன்றுமாறும் பொது இயக்கங்களில் கலந்து கொள்ளுமாறும் மன எழுச்சி தோன்றும் வகையில் பள்ளிப் பயிற்சி யளிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாணவனும் மாணவியும் தம் பள்ளிக்கல்வி முடிந்தபின்னர் ஒவ்வொரு வளர்ச்சிக் குறிப்பேடு (Record of Progress) கொடுக்கப்பெற்றனர். இந்தியாவிலும் சில பிறநாடு

களிலும் தேர்வுச் சான்றுகள் (Certificates) மாணவர்களுக்குக் கொடுக்கப் படுவது போன்றதொரு வழக்கம் ஜெர்மனியில் கிடையாது, நிற்க.

ஹெர் ஹிட்லர் அரசுக்கட்டில் ஏறிய பின்னர் மேற்கூறப்பட்ட கல்வி முறையில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. எல்லாத் துணைப்பள்ளி (Secondary School) மாணவர்களுக்கும் ஒரேபடித்தான அளவில் (One uniform standard) கல்வி கற்பிக்கவேண்டும் என்பதும், மாணவர்கள் யாவரும் நாட்டின் நலங்களுக்கேற்ற துறைகளிலேயே முற்றும் பயிற்றப்படவேண்டும் என்பதும், ஒவ்வொரு மாணவனும் மாணவியும் நாட்டுக் குழுவியற்கொள்கையினராக (National Socialist) ஆதற்கேற்ற கல்வி பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பதும், மாணவர்கள் வருங்கால நாட்டுத் தலைவர்களாக ஆதற்கேற்ற முறையில் பயிற்றப்பட வேண்டும் என்பதும் ஹிட்லரின் தேர்ந்த கொள்கைகளாம்.

ஹிட்லர் கல்விமுறை மக்களின் அறிவையும் உளத்தையும் விளக்கத் தோன்றினதன்று; உயிர்க் குறுதி பயப்பதுமன்றும். நாட்டின் ஒருமை கருதி அரசியலின் நிலை வேண்டி, ஆற்றலுள்ளார் சிலர் நடாத்தும் ஓர் இயக்கமே இன்று ஜெர்மனியின் கல்விமுறை ஆகின்றது. உடல் உறுதியும் கடமை உணர்ச்சியும்(Sense of responsibility), நாட்டின் நலங் கருதி, தந்நலம் விடுத்து, அரசியலார்க்கு உட்பட்டு உழைக்க விரும்பும் உணர்ச்சியும், கட்டுப்படும் தன்மையுணர்ச்சியும் (Sense of discipline) தோழமை உணர்ச்சியும் (Sense of comradeship) ஆய இவைகளைத் தோற்றுவித்தலே தற்காலத்திற் கேற்ற கல்விப் பணியாம் என்பது ஹிட்லரின் கொள்கை. அறிவின் ஆற்றலைப் பெருகுவித்தலும், அறிவியற் கலைகளைக் கற்பித்தலும், தற்போதைய ஜெர்மானிய கல்வி முறையில் இரண்டாம் படி முறையிலேயே வைக்கப்பட்டிருக்கின்றன.

பல்கலைக் கழகங்களில் தேர்ந்து எண்ணற்ற மாணவர்கள் அரசியலில் அலுவல் தேடி அலைவதைக் கண்ட ஹிட்லர் இன்னின்ன பல்கலைக் கழகங்கள் இன்னின்ன எண்ணிற்கு மேற்பட்ட அளவில் மாணவர்களைக் கொள்ளுதல் கூடாதென ஒரு புது விதியும் செய்தனர். இது அறிவு விளக்கம் ஒன்றே கருதிக் கற்கும் மாணவர்க்கு ஓர் இடையூறு ஆயிற்று. ஹிட்லர் அரசியல் பெற்ற நாளிலிருந்து பெண் கல்வி மிகவும் குன்றி விட்டது. ஆண்பாலார்க்கு அடங்கி நிற்றலும், அவருடன் கூடி இல்லறம் நடாத்தலுமே பெண்பாலார்க் குரிய கடமைகள் என்பது ஹிட்லரின் கொள்கை.

இசைத் தமிழ்ச் செல்வர்

திரு. தி. இலக்குமணப் பிள்ளை அவர்கள் B. A.

(முகப்புப் படம் பார்க்க)

பிறப்பு

தொடக்கத்தில் திருச்செந்தூரிலிருந்து பின்பு பாளையங்கோட்டையிற் சிலகாலம் வாழ்ந்து கி. பி. 1764-ம் ஆண்டு திருவிதாங்கூரிற் குடியேறிய உயரிய சைவ வேளாள குடும்பத்திற் பிறந்து திகழ்பவர் திரு. தி. இலக்குமணப் பிள்ளையென்பார். திருவிதாங்கூர் வலிய மேலெழுத்ததிகாரி (Accountant General) யாக இருந்த திருவாளர் எம். திரவியம் பிள்ளை என்பாரின் இரண்டாவது பிள்ளையாக இவர் 1864-ம் ஆண்டு மே மாதம் 3-ம் நாள் பிறந்தார். திருவனந்தபுரம் ஆங்கிலக் கல்லூரியில் தருக்க தத்துவப் பேராசிரியராயிருந்தவரும், பின் திருவிதாங்கூர் டிவிஷன் அஸிஸ்டெண்டாயிருந்தவரும், இரண்டாவது இளைய மன்னராயிருந்த அசுவதி திருநாள் அரசகுமாரருக்கு ஆசிரியராயிருந்து புகழ் பெற்றவருமான திரு. தி. முத்துக்குமார சுவாமி பிள்ளை என்பார் இவருடைய தமையனாராவர்.

கல்வி

திரு. இலக்குமணப் பிள்ளையவர்கள் திருவனந்தபுரம் ஆங்கிலக் கல்லூரியில் 1886-ம் ஆண்டில் பி. ஏ. பட்டம் பெற்றனர். அக்கல்லூரித் தலைமை யாசிரியராயிருந்த டாக்டர் ஹார்வி என்பார் ஆங்கிலத்திலும் உளநூற்றுறையிலும் பிள்ளையவர்கள் உயர்புலமை யெய்தி யிருந்ததைப் புகழ்ந்து கூறியுள்ளார். பி. ஏ. பட்டம் பெற்றபின் சட்டத்தேர்விற்குப் படித்துவருங்காலை, திருவனந்தைத் திவானாக இருந்த கண்ணியம் பொருந்திய இராமையங்கார் அவர்களால் கணக்குப் பயிற்சிக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சென்னைக்கு அனுப்பப்பட்டனர்.

அலுவலேற்றமை

கணக்குப் பயிற்சி பெற்றுத் திருவனந்தபுரம் திரும்பியவுடன் பிள்ளையவர்கள் "ஜமாபந்தி" தனிக்கையாளராகவும், பின்னர் மராமத்து "ஸெக்ரட்டெரி"யின் கீழ் இரண்டாம் எழுத்தாளராகவும் அலுவலேற்றனர். பின் கம்பட்டசாலை (Mint) அதிகாரியாகவும், அச்சுக்கூட அதிகாரியாகவும்

ஆலப்புழை கச்சவடம் வகைத் (Commercial Office) தலைமை எழுத்தாளராகவும் இருந்து திருவனந்தபுரம் உப்பு வட்டம் கண்காணிப்பாளராக அமர்ந்தார். இவர் வேலைத் திறமையையும் உண்மை யுழைப்பையும் கண்ட திவான் கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் இவரைக் கோட்டையம் வட்டம் "ஷெரிஸ்ததார்" ஆகவும் பின்னர் "ஸ்டாம்பு அண்டு ஸ்டேஷனரி சூப்பரின்டெண்டென்"டாகவும் உயர்த்தினார். சிறிது காலத்திற்குப்பின்னர், கணக்கு வட்டம் கண்காணிப்பாள ராகவும், திருவனந்தை ஹஜுஸூர் கஜானா ஆபீஸராகவும், அக்கவுண்ட் அஸிஸ்டெண்டு ஆபீஸராகவும் இறுதியில் ரூ. 250 சம்பளத்தில் மேஜர் கஜானா ஆபீஸராகவும் அமர்ந்து பணியாற்றி 1920-ம் ஆண்டில் தம் 56-ம் வயதில் அடுத்தூண் (Pension) பெற்றுக் கொண்டார். அதன் பின்னர், திருவிதாங்கூர் சட்டசபை உறுப்பினராகவும் அமர்ந்து விளங்கினார்.

ஆசிரியப் புலமை

ஆங்கிலப் பயிற்சி முடிந்ததும் இவர் தமது 21-வது வயது முதல் 27-ம் வயது வரையில் தமிழிலக்கியத்திலும் ஆங்கிலப் பயிற்சியிலும் இசை நூற்கேள்வியிலும் தம் காலத்தைச் செலவிட்டு வந்தனர். திருக்குறள், திருவருட்பா, அடிஸன், ஷேக்ஸ்பியர், எமர்ஸன் முதலிய ஆங்கில ஆசிரியர் எழுதிய நூல்கள், சோபக்ளீசர் (Sophocles) டெமாஸ்தெனிஸ் முதலிய கிரேக்க ஆசிரியர் நூல்கள் ஆகிய இவற்றில் பிள்ளையவர்கள் தம் தனிக்கருத்தைச் செலுத்திப் பயின்று வந்தனர். தம் 24-ம் ஆண்டில் "தமிழ்மொழி வளர்த்தல்" என்னும் அரிய கட்டுரை யொன்றை எழுதி அம்மொழியில் தமக்கிருந்த ஆர்வத்தை வெளியிட்டனர். சோபக்ளீசர் எழுதிய "பீலக்டிட்டிஸ்" என்ற கிரேக்க நாடகத்தைத் தமிழில் "வில நாடகம்" என்ற பெயருடனும் ஷேக்ஸ்பியர் எழுதிய "ஸிம்பலின்" என்ற ஆங்கில நாடகத்தைத் தமிழில் "சத்தியவதி" என்னும் பெயருடனும் "மயங்கு கட்டளைக் கலித்தொடர்" என்னும் புதியதோர் பாவினத்தில் அமைத்துப் பாடி வெளியிட்டனர். "இரவிவர்மன்" என்ற பெயருடன் ஒரு வரலாற்றுத்துறை நாடகத்தைத் தாமாகவே இயற்றி மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் 1906-ம் ஆண்டில் அரங்கேற்றினர். இன்னும் பலபாவினங்களில் ஞானானந்தனடி மாலை, நினைவொட்சி இயற்கைக் குறிப்பு முதலிய பாடல்களைப் பாடியுள்ளார் அன்றியும் ஆங்கிலத்தில் தத்துவம், இசை, இலக்கியம் முதலியவற்றைப்பற்றிப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர்தம் செய்யுட்டிறத்தை

வியந்து உயர்திரு. பாப்புலித் துரைமகனார் இவரை வங்கக் கவிஞர் இரவீந்திரநாத தாகூருடன் ஒப்பிட்டுப் புகழ்ந்துள்ளார். "தமிழ்ச் சொல்வழக்கு" (Tamil Idioms) என்னும் பெயருடன் தமிழ் மரபுச் சொற்களையும் சொற்றொடர்களையுந் தொகுத்து ஒரு நூலும் வெளியிட்டுள்ளார்.

இசைப் பயிற்சி

இளமையிலேயே பிள்ளையவர்கள் தமக்கிருந்த இசைத்திறுவை வெளிக்காட்டவே, இவர்தம் தந்தையார் ஏழாவது வயது முதல் இவருக்கு முறையாக இசைக்கலை பயிற்றுவித்தார். ஏழு ஆண்டுகள் பயின்றதன் பயனாக, இவர் தம் பதினான்காம் ஆண்டில் திருச்செந்தூர் முருகன்மீது ஓர் இசைப்பா (கீர்த்தனம்) இயற்றிப்பாடினர். அதுமுதல் ஓய்வு கிடைத்தபோதெல்லாம் இசைக்கலையைப் பெரிதும் ஊக்கத்துடன் பயின்றுவரலானார். இவ்வாறிருக்கத் தம் 27-ம் ஆண்டில் அருவிக்கரை யென்னும் சிற்றூருக்குச் சென்றிருந்தகாலை எதிர்பாராத வகையில் நீர் வெள்ளத்திற் சிக்கி உயிர்துறக்கவிருந்த தருவாயில் இவர் கடவுளைப்பரவி வழிபடவே, எவ்வாறு தப்பினாரென்று அறியாத வகையில் கடவுளருளால் கரைசேர்ந்தார். இந்நிகழ்ச்சி காரணமாக அதுமுதல் வாய்த்த போதெல்லாம் திருவருளை வியந்தும், உயிர்கள்மாட் டிரங்குவதைக் குறித்தும் பல இசைப்பாக்கள் பாடிவரலானார்.

இசைத் தேர்ச்சி

இவருடைய கீர்த்தனங்கள் ஞானம், அறம், பக்தி என்ற மூன்று வகையாகப் பாகுபடுத்தற்குரியன. அவை திருவிதாங்கூர் மன்னர் மூலம் திருநாளாலும், கேரளவர்ம கோயில் தம்பிரான் ஸி. எஸ். ஐ. என்பாராலும் ஓவியக்கலைப் பேரறிஞர் இராஜா இரவிவர்மராலும் புகழ்ந்து பாராட்டப் பெற்றிருக்கின்றன.

1927-ம் ஆண்டு சென்னையில் கூடிய பேரிசை மகாநாட்டில் இவர்தம் இசைப்புலமையை வியந்து இவருக்கு ஒரு பொற்பதக்கம் அளிக்கப்பட்டது. இசை நூலாசிரியர் திரு. எம். எஸ். இராமசாமி ஐயர் பி. ஏ., பி. எல். எல். டி. என்பார் இவரைத் "தமிழ்த்தியாகையர்" என்றே புகழ்ந்தோதியுள்ளார். இவர் தம் இசைத்தேர்ச்சியை வியந்து பாராட்டி, திருவனந்தக் காட்சிச்சாலையில் இவருடைய உருவப்படத்

ஐதத் திறந்து வைப்பதென்ற நோக்கத்துடன் இவர்தம் நண்பர்களால் ஒரு படமும் தீட்டப்பெற்று வருகிறது. 1934-ம் ஆண்டு திருநெல்வேலியிற்கூடிய சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டில் இவருடைய கீர்த்தனங்கள் பாடப்பெற்று "இசைத் தமிழ்ச் செல்வர்" என்ற பட்டம் அளிக்கப் பெற்ருர். சென்னைச் சங்கீத மகாசங்கத் தேர்ச்சியாளர் கூட்ட உறுப்பினராகவும், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெறும் "சங்கீத பூஷண"த் தேர்விற்கு தேர்வுத் தாளசிரியர்களில் ஒருவராகவும் இருந்து வருகிருர். இவர் தம் கீர்த்தனைகள் சுரக்குறி யீட்டுடன் இப்போது அச்சிடப்பட்டு வருகின்றன; விரைவில் வெளிவரும்.

இவ்வாறு ஆங்கிலத்திலும் தமிழிலும் இசையிலும் கடவுட்பற்றிலும் ஒருங்கே தனிப் பெருமை பெற்று இலங்கிவரும் திரு. பிள்ளையவர்கள் இன்னும் பல்லாண்டுகள் உடல் நலத்துடனிருந்து தமிழுலகிற்கும் இசையுலகிற்கும் பெரும் பணியாற்றி வருமாறு இறைவன் அருள் புரிவானுக.

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

திருநெல்வேலி கவர்ன்மெண்டு பிளீடரும், பப்ளிக் பிராசிக்யூட்டருமான திருவாளர் P. ஆவுடையப்ப பிள்ளை அவர்களுக்கு "இராவ் சாகிப்" என்னும் பட்டம் அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டிருப்பது குறித்து நாம் மகிழ்வதுடன் திரு. பிள்ளையவர்களையும் பாராட்டுகின்ருேம்.

* * *

சென்ற மார்கழித் திங்கள் 6-ம் நாள் (21-12-1934) காலஞ்சென்ற பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்களது மூன்ரும் ஆண்டு நிறைநாள் நமது கழக மேடையில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அக்காலை, திருவாளர் திவான் பகதூர் ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் B.A., B.L. தலைமை வகித்தனர்; திரு. டாக்டர் இராவ்பகதூர் C. நடேச முதலியார் அவர்கள், மயிலை சிவ. முத்துக்

குமாரசாமி முதலியார் அவர்கள், பழனியாண்டிப் பிள்ளையவர்கள் முதலிய பலர் குழுமியிருந்தனர். "தமிழர் இயக்கம்" என்ற பொருள் பற்றி, பச்சையப்பன் கலாசாலை ஆசிரியர் திரு. T. செங்கல்வராய பிள்ளையவர்கள் BA. L.T. மிகவும் உருக்கமாகவும் நயம்படவும் சொற்பொழிவாற்றிக் குழுமியிருந்தோர் உள்ளத்தில் புதியதோர் கிளர்ச்சியை யுண்டுபண்ணினுர்கள். திரு. மணி. திருஞானசம்பந்தமுதலியார் அவர்கள் "தமிழ்ச் சிறப்பு" என்பதை பொருளாகக் கொண்டுஇனிமையும் பொருட் செறிவும் பொருந்தியதோர் அரிய சொற்பொழிவாற்றினுர்கள். அதன்பின் தலைவர் திரு. ஏ. இராமசாமி முதலியாரவர்கள் திரு. மாணிக்க நாயக்கர் அவர்களின் பண்பு அறிவாற்றல்களையும் செய்தொழிற்றிறனையும் பலபடப் பாராட்டிக் கூறி, வடநாட்டில் திரு. கங்காராம் என்ற பொறிவலாளர் ஒருவருடைய திறமையை மெச்சிச் சாலைகளும் கட்டிடங்களும் பாலங்களும் அவர் பெயராலே அழைக்கப்படுவது போல், திரு. கங்காராமினும் எத்துணையோ மடங்கு சிறந்த பேரறிஞர் திரு. மாணிக்க நாயக்கர் பெயரால் அத்தகைய நினைவுக் குறிகள் ஒன்றும் அமைக்கப்படாதிருப்பது தமிழர்தம் நன்றியறிதலுக்கும் மேம்பாட்டிற்கும் ஓர் இழுக்காகும் என்று வருந்திக் கூறினுர்கள். கூட்டம் இரவு 8-30 மணிக்குக் கலைந்தது.

* * *

மகா மகோபாத்யாய தாக்ஷிணுத்ய கலாநிதி டாக்டர். உ. வே சாமிநாத ஐயர் அவர்களுடைய எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்புடன் 1935-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 6-ம் நாள் கொண்டாடி சென்னைப் பல்கலைக் கழகக் கட்டிடத்தில் அன்னுர்தம் உருவப்படம் ஒன்றைத் திறந்து வைத்துப் பெருமைப் படுத்தகனம் பி. டி இராஜன் திரு. டி சிவராமசேதுப் பிள்ளை, என். எஸ். வையாபுரிப்பிள்ளை முதலியோர் சேர்ந்து ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்கள். தமிழ்நூற் பயந்த தமிழர் ஒருவரைப் பெருமைப் படுத்துதல் இக்காலத்தில் மிகவும் இன்றியமையாததாகும். இச் சிறப்புவிழாவிற்கு அன்பர்கள் தத்தம் மாலியன்ற பொருளுதவியைப் புரியுமாறு வேண்டிக் கொள்கிரேும்.

* * *

மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் அரசுக் கட்டிலேறி இருபத்தைந்தாண்டுகள் ஆகப்போகின்றமையின் வருகிற மே மாதம் 6-ம் நாளன்று வெள்ளி விழா கொண்டாடுவதென முடிவு கட்டப்பட்டுளது.

* * *

சென்னைக் கருகிலுள்ள கோடம்பாக்கத்திலிருக்கும் வட பழனி 7-ம் நாள வியாழ யாண்டவர் கோயில் குடமுழுக்குவிழா சென்ற னன்று மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது.

மதிப்புரை

சோமசம்பு பத்ததி:—சோமசம்பு சிவாசாரியார் இயற்றிய "கிரியாகாண்ட க்ரமாவளீ" என்னும் நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. விலை ரூ. 2—8—0. கிடைக்குமிடம்: சிவாகம சங்கம் தேவகோட்டை.

சிவாகமங்களிலுள்ள கிரியாகாண்டப் பொருள்களைத் திரட்டி முறையாக வரிசைப்படுத்திப் பத்ததி என்னும் பெயருடன் பதினெட்டுப் பத்ததிகள் பதினெட்டு சிவாசாரியர்களால் செய்யப்பட்டுள்ளன என்றும் அவருள் ஒருவரான சோமசம்பு சிவாசாரியார் எழுதியதே சோமசம்பு பத்ததியென்றும் கூறுவர். இந்நூல் 1180 ஆண்டுகட்குமுன் எழுதப்பட்ட தொன்றாகும். இதற்கு இதுகாறும் வெளிவராத தமிழ்மொழிபெயர்ப்பு ஒன்றைச் சைவ உலகினுக்கு அச்சிட்டு உதவிய தேவகோட்டைச் சிவாகம சங்கத்தின் முயற்சி போற்றற்பாற்று.

இராஜயோகம்:—சுவாமி விவேகாநந்தர் எழுதிய ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. விலை ரூ. 1—4—0. கிடைக்குமிடம் இராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

இந்தியர்தம் உயர்வையும் மேன்மையையும் உலகெங்கும் நிலைநாட்டிய விவேகாநந்த அடிகளை அறியாதார் யார்? அப்பெரியார் தாம் செய்கையில் உணர்ந்து எழுதிய "இராஜயோகம்" என்ற நூல் யோகத்தின் உண்மைப் பெருமையுணர்ந்த ஒவ்வொருவராலும் படித்துச் சிந்தித்துப் பயிலற்குரியதாம். இயற்கைக்கு அப்பாலும் உயிர்கள் உளவென்று கொள்வதால் மனிதனுக்கு அச்சமும் மூட நம்பிக்கையும் உண்டாகி ஓரளவுக்கு அவன் வலியிழந்தவனாகின்றான். என்ற இச்சைகளும் குறைவுகளும் மனிதனிடத்திற் காணப்பட்டதோ அன்றே அவற்றை நிறைவிக்கும் ஆற்றலும் அவனிடத்து அமைந்துளது. அவ்வாற்றல் தானும் அவனையொழிந்த வேறொரு உயிரிடத்திலிருந்து வருவதாகக் கொள்வது பொருளற்றதாம். இயற்கைக்கு மேலான பொருள் வேறொன்றுமில்லை. இத்தகைய உயர்ந்த கருத்துக்களைப் படிப்போர் மனத்திடையுண்டுபண்ணி, தமிழர்தம் கொள்கையின் அடிப்படையான இயற்கை வழிபாட்டை மேனிறுத்தும் இந்நூல் தமிழர் ஒவ்வொருவராலும் வாங்கிப் படித்தற்குரியதாம்.

மனோன்மணீயம்:—(வசன அமைப்பு) திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் எம். எ. எல்.டி. எழுதியது. விலை ரூ. 1—4—0. கிடைக்குமிடம்: ம. சண்முகசுந்தரமுதலியார் எம். ஏ. எல். டி. சுந்தர நிலையம், பச்சையப்பா ஹாஸ்டல் ரோட். சேத்துப்பட்டு, சென்னை.

இராய்பகதூர் P. சுந்தரம்பிள்ளை அவர்கள் நமது செல்வி நேயர்களுக்கு நன்கனம் தெரிந்தவர்களே. அன்னாரெழுதிய ஒப்பும் உயர்வுமற்ற நாடக நூலாகிய "மனோன்மணீயம்" தமிழ்க் கல்வியின் தற்போதைய நிலைமையில் யாதொரு இடர்ப்பாடுமின்றி எளிதில் உணர்ந்து கொள்வதற்கு இயலாதிருக்கின்றமை கருதியும், நடித்துக் காட்ட முடியாதிருக்கின்றமை கருதியும் தெள்ளிய உரைநடையில் அதனைத் திரு. ம. சண்முகசுந்தரமுதலியார் அவர்கள் தமிழுலகிற்கு எழுதியுதவியுள்ளார்கள். இதனைச் சேருந் தொகையைத் திரு. சுந்தரம்பிள்ளை அவர்கள் பெயரால் தமிழ்க்கலை வளர்ச்சி கருதி சென்னைப் பல்கலைக் கழகத்தார் பொறுப்பில் ஒரு பரிசளிப்பதற்குப் பயன்படுத்தப்படும் என்று கண்டு களிபேருவகையெய்துகிறோம். காலஞ்சென்ற பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்களின் அன்பர்கள் இவ்வுரைநடை நூலையேற்றுப் பரிசுக்கான மூலப்பொருளை விரைவில் திரட்டியளிக்க உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தருக்கசாத்திரச் சுருக்கம். (The Elements of Logic) நல்லூர் உயர்திரு. சுவாமி ஞானப்பிரகாசர் எழுதியது. பதிப்பாளர் பாலபண்டிதர் P. S. ஞானப்பிரகாசம் மிரிசுவில், யாழ்ப்பாணம்.

அறிவியற்கல்வி யகன்று மேம்பாடுற்று வருகின்ற இக்காலத்தில் அறிவியற்றுறைகள் பற்பலவற்றைப் பற்றியும் எத்தனை நூல்கள் எழுதப்பட்டு வெளிவரினும் அவை மிகையாகா. அண்ணாமலைச் சர்வகலாசாலையார் அளவை நூலைப் பற்றிய பாடபுத்தகமொன்றை வெளியிட்டதைத் தொடர்ந்து, பன்மொழி வல்லுநரும் பேரறிஞரும் தேர்ந்த மொழிநூலாராய்ச்சியாளருமாகிய யாழ்ப்பாணத்து உயர்திரு. சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய இந்நூல் அச்சேறி வெளிவந்தது மகிழ்தற்பாற்றே. இத்தகைய பல நூல்கள் தொடர்ந்து வெளிவருதல் இன்றியமையாததாகும்.

"தனித்தமிழே அன்றி வடமொழிச் சொற்கலப்புள்ள தமிழ் தக்கதன்று என விலக்குகின்ற நவீன நூலாசிரியர் சில்லோரது அபிமதத்தை இந்நூலினுள் மேற்கொண்டிலேம்."

* * * * "வடசொற்களை அடியோடு நீக்கி விடுவமாயின் தருக்கம் ஆதிய சாத்திரங்கள் சில இருந்த இடமுந் தெரியாமற் போய்விடும். இதனால் அன்றே வேண்டும் இடந்தோறும் இந்நூலின்கண் வடசொற்களையும் எடுத்தாண் டிருக்கின்றனம்" என்று ஆக்கியோர் முன்னுரையில் எழுதியிருப்பதைத் தமிழ்மொழிப் பற்றுள்ளோர் எத்துணை ஆதரிப்பார் என்று கூறுதல் முடியாது.

"வடசொற் பகுதிகளை அங்கமாக வைத்து ஆக்கும் விஞ்ஞான சம்பந்தச் சொற்கள் சுருக்கமும் விளக்கமும் பொருந்தியன என்றல் ஒருதலை" என்று அறுதியிட்டுக் கூறிய ஆசிரியர் பின் "சுருங்கச் சொல்லல் நோக்கியும் உயர்தரக் கல்வி பயில்வோர்க்கு இன்பம் ஊட்டும் முகத்தானும் இந்நூல் செந்தமிழ் நடையை ஒருபுடை தழுவி யாக்கப்பெற்றது என அறிக" என்று கூறியிருப்பதால் நூலாசிரியர் இரு மொழிகளையும் ஏற்றத்தாழ்வின்றி ஒப்ப நோக்கும் பெருந்தகையாளர் என்றே கருதக் கிடக்கின்றது.

ஆசிரியர் கருதிய பயனை இந்நூல் எய்துவிக்கும் என நம்புகிறோம்.

திருவருணைக் கலம்பகம்: மூலமும் உரையும்: காழி. சிவ. கண்ணுசாமி B.A. பதிப்பித்தது. 192. பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1—0—0. நமது கழகத்திற் கிடைக்கும்.

நவில்தொறும் நவில்தொறும் நாநயம் பயப்பதும் பயில்தொறும் பயில்தொறும் பத்திச்சுவை மிகுப்பதுமாகிய சைவர் கருவூலமெனத் தகும் திருவருணைக் கலம்பகத்திற்கு இதுகாறும் ஒரு தெளிவான உரை யில்லாதிருந்தது பெருங் குறையேயாகும். நம் செல்வி இதழாசிரியர்களில் ஒருவராகிய தருமையாதீன வித்துவான் காழி. சிவ. கண்ணுசாமி அவர்கள் சிதம்பரத்தையடுத்த நகராமலை. இராமலிங்கம் பிள்ளை என்ற பெரியா ரெழுதி யுதவிய உரையை யச்சிட்டு அக்குறையைத் தீர்த்துவைத்தது கண்டு கழிபேருவகை யெய்துகிறோம். செவ்விய நடையில் உரைநூலுக்கு வேண்டிய எல்லா இலக்கணங்களு மமைந்து மாணவர்க்கும் மற்றையோர்க்கும் ஒருங்கே பயன்படுமாறு இந்நூல் அமைந்திருப்பது இதன் தனிச்சிறப்பாகும். கண்ணைக் கவரத் தக்கவிதமாய்ச் சீரிய முறையில் அச்சிடப்பட்டிருக்கும் இந்நூலைத் தமிழ் மக்கள் வாங்கிப் படித்துப் பயன்பெறுமாறு வேண்டுகிறோம்.

கப்பம் கொண்டு அவர்கள் வணங்க வெற்றிகொண்டு, வடித்த வாளாயுதத்தைத் தாங்கியவர்களாய்க் கோட்டைகளைக் கைப்பற்றிக் காக்கின்ற படைவீட்டவர்களான ஐந்துகோட்டை வளநாட்டவர்களான மறவர்கள். (௧௨)

சொக்கர்பா கத்திலுறை துக்கையோ கத்துதர
பக்கமாகப் பழுவைநேர்
தொடுவளை தடிப்படை யெனக்கொடுத் துக்கிரத்
தோன்றலுக்குத் துணையெனும்
மக்களா கப்பஞ்ச லட்சுமியை யுந்திரு
மணஞ்செய்வித் தவனிகாக்கும்
வழுதிக் களித்துல குனக்குமொரு பாதியிவ
ருக்குமொரு பாதிமனுநீ
திக்குநா லுக்குமுறை யாக்கினைச் சக்கரச்
செங்கோ னடாத்து மெனவே
திருவுள முரைத்தவை காமருள் பரிக்கவரு
தேவதலை மைப்பெயரினோர்
கொக்கைமா றன்பாதி பாதிகா வலவர்செங்
கோன்மைவழு வாதுவடிவாட்
கோட்டையிடு கின்றபடை வீட்டவர்க ளேவைந்து
கோட்டைவள நாட்டவர்களே. ௧௩

மதுரைச் சொக்கநாதரின் வாமபாகத்துறையும் பார்வதியாரின் வயிற்றின் பக்கமாகவுள்ள விலாவெலும்பை ஒப்ப விளங்கும் வளைந்த 'வளைதடி' என்பதை ஆயுதமாகக் கொடுத்து, உக்கிரகுமாரபாண்டியனுக்குத் துணைவர்களான மக்களாக, ஐந்து இலக்குமிகளையும் திருமணம் புரிவித்துப் (ஐந்து இலக்குமிகளின் அருளையும் பெற்று) பூமியைக் காக்கும் பாண்டியனுக்குக் கொடுத்து; 'இராஜ்யம் உனக்கு ஒருபாதியும் இவர்களுக்கு ஒரு பாதியும்' எனக் கூறி; 'மனுநீதி முறைப்படி நான்கு திசைகளிலும் ஆணைச்சக்கரத்தை நடத்திச் செங்கோல் புரியுங்கள்' எனவும் அழகிய மனத்தோடு கூறிய மொழிகளை விருப்பத்தோடு பெற்று உலகு காவலைக்கொண்ட தெய்வத்தன்மை மிக்க சிறப்பான் மிகுந்த பெயரினையுடையோர்: யாரெனில்; கொற்கைநகரத்திருந்து அரசுபுரியும் பாண்டியனுக்குரிய பாதி போக, மற்ற பாதிக்குக் காவலர்களாகச் செங்கோல் செலுத்தும் முறைமையில் தவறிடாத வழக்கப்பட்ட வாளாயுதத்தைக் கொண்டு

வர்களாய்க் கோட்டைகளைக் கைப்பற்றிக் காவல் புரியும் படைவீட்டவர்களான ஐந்து கோட்டை வளநாட்டவர்கள் எனும் மறவர்கள்.

சொக்கலிங் கமும்முலைத் தடாதகை தனைச்சுய
மங்கலஞ் செய்துக்கிரத்
தோன்றனை யேபயின் றரசுரிமை செய்யமுடி
சூட்டியர சாளவைத்துத்
திக்குவிச யக்கயற் கொடிசெண்டு வேல்திகிரி
செங்கையதனிற் கொடுத்துச்
செய்கைக்கு மெய்க்கா யிரம்பொன் கொடுத்தரிய
சேவகங் கொள்கவெனவே
மக்கடனில் மிக்கஅரி யரபுத்தி ரன்றன்னை
வரிசைஒண் டொடியில் வைத்து
மனுமுறை வழாதுலகு தனியரசு புரிகையென
வாக்கருள அரசுரிமையுங்
கொக்கைமா றன்றனைச் சேவித்த சாத்தனொடு
கூடவொரு வாசலர்கள் வாட்
கோட்டையிடு கின்றபடை வீட்டவர்க ளைவந்து
கோட்டை வள நாட்டவர்களே. கச

மதுரைச் சொக்கநாதப் பெருமான் மூன்று தனங்களோடு மலயத்துவசனுக்குத் தோன்றிய தடாதகைப் பிராட்டியாரை மணந்து, உக்கிரகுமார பாண்டியனைப் பெற்றளித்து அரசுரிமையும் கொடுத்து முடி சூட்டுவித்து அரசாட்சி புரியச்செய்து, திசைதோறும் படை கொண்டு சென்று வெற்றிமிக்க மீனக்கொடியையும், செண்டு எனும் ஆயுதத்தையும், வேலாயுதத்தையும், சக்கராயுதத்தையும் செம்மையான கைகளில் அளித்து, 'அரியசெயல் செய்வார்க்கு ஆளுக்கு ஆயிரம் பொன் கொடுத்து அன்னார் சேவகமாகிய (வீரச்) செயலையும் கொள்க' என்றுகூறி, மக்களில் சாத்தனாரை முறையில் வீரவளைகளோடு முதலில் அமர்த்தி; 'மனுநீதிமுறை தவறாமல் உலகைத் தனிப்பட ஆட்சிபுரிவாயாக' என்று நல்வாக்கையுமருளி அரசாட்சி புரிமையையும் (பெற்று) கொற்கைப் பாண்டியனை வணங்கிய சாத்தனோடு ஒரும் வாயிலில் விளங்குவோர், வாளைக் கையிற்கொண்டு கோட்டைகளைக் கைப்பற்றிக் காவல் புரியும் படை வீட்டவர்களான ஐந்து கோட்டை வளநாட்டவர்கள் எனும் மறவர்கள்.

மூதண்ட லோகமெங் குந்தனை ணைக்குண்மனு
முறைசெல நடாத்துசெங்கோன்
முழுதுமொரு நாளதிற் பகல் வழுதி காவலாய்
முறைமைபெற வாசியற்ற
ஏதங்க ளண்டாதி ராவங்கள் நிலமெங்கு
மிவர்காவ லாய்நகர்தொறு
மிருப்பூசி போகையிற் பொன்னூசி யேகொடுத்
தெண்டிசைக் கம்ப நாட்டில்
பாதங்கொள் பாரெங்கு மேவந்து திறைகண்டு
பரவுபுய வலியசூ லகிலப்
பாதிகா வலவரென் றுதிநூல் விதிதொறும்
பகருமதி காரமுடையோர்
கோதண்ட பாணிதோழமை கொண்டகுகனவன்
குலதீப ருலகில் வடிவாட்
கோட்டையிடு கின்றபடை வீட்டவர்க ளைவந்து
கோட்டைவள நாட்டவர்களே. கரு

தேவலோக மளவும் தங்கள் ஆணைக்குள்ளாக மனுநீதி முறைக்கேற்பச் செங்கோல் நடத்தி, உலகமுழுவதும் ஒரு நாளில் பகற் பொழுதிலேயே கைப்பற்றிக் கொடுத்துக் காவலாக்கி முறைமைப்படி இசைப்பாட்டுப் பாடி நிற்ப, குற்றங்கள் சாராத உலகில்; நிலத்திலெங்கும் இவர்கள் காவல் புரிவோராய், நகரந்தோறும் இரும்பினாலான ஊசியைப் பெறுவார் பொன்னூசியையே கொடுக்கும் அத்தகைய செல்வம் மல்கி, எட்டுத் திசைக்கம்பம் விளங்கும் நாட்டினிடத்தில், பாதத்தைத் தம் முடியிற்கொண்டு பணியுமாறு பூமியிலுள்ள அரசர்களும் பிறரும் வந்து கப்பத்தை யளிப்பது கண்டு மகிழும் விசாலமான தோள் வலிமையினால் உலகில் பாதிக்குக் காவலர்கள் என்று முதல் நூல் எனப்படும் வேதமுறைப்படி சொல்லப்பெற்ற அதிகாரத்தை யுடையவர்கள் யாரெனில், கோதண்டம் என்னும் வில்லைக் கையிற் கொண்ட இராமபிரானது தோழன் என்று அப்பெருமானால் கொள்ளப்பட்ட மறவனான குகன் என்பானது குலதீபர்கள் எனப்படும், உலகில் வாளாயுதத்தை ஏந்தியவர்களாய்க் கோட்டைகளைக் கைப்பற்றிக் காவல் புரியும் படை வீட்டவர்களான ஐந்து கோட்டை வள நாட்டவர்களென்னும் மறவர்கள்.

மானில முயப்பெய்ய மழைகொண்டு வரவன்று
வானவர்க் கிறையுலகிலே
வழுதிசெலு நாட்கையிலத் திருவாழி மோதிரமு
மார்பிலணி நிம்பமாலை
நானியற் றிடுதனிக் கோல்வழு விடாமுறை
நடாத்துக வெனக்கொடுக்க
நரபால கங்கனருள் வெகுராச வரிசைபெறு
நாமநவில் நூல்விதியினோர்
மீனவ னுயர்த்தகயல் மேல்வளை தடிக்கொடியை
மேருவிற்பொறித் தாழிசூழ்
மேதினியி னிற்பாதி காவலவ ராய்மனு
விளங்கிய பெரும் புகழினோர்
கோனிவ னெனச்சொல்ல வேபதர் கோன்மையுங்
கொண்டவர்கள் வென்றிவடிவாட்
கோட்டையிடு கின்றபடை வீட்டவர்க ளேவைந்து
கோட்டைவள நாட்டவர்களே.

௧௬

பூலோகத்தவர்கள் பிழைக்கும் பொருட்டாக மழையைக் கொண்டு வரவேண்டுமென்று தேவேந்திரனுடைய உலகிற்குப் பாண்டியன் சென்ற நாளில், கைகளில் அந்த அழகிய சக்கரமும், மோதிரமும், மார்பினில் விளங்கும் வேப்பமாலையும் விளங்க, நான் புரியும் ஒப்பற்ற அரசாட்சிக்குக் குற்றமும் தவறுதலும் நேரிடாதபடி செலுத்துக என்று அளிக்கவும்; மக்களைக் காக்கின்ற விரதங்கொண்ட அரசர்களுக்கிருந்த ராஜ வெகுமதிகளைப் பெறத்தக்க சிறப்பான் மிக்க புகழ்ந்து சொல்லப்பட்ட வேத நூலின் விதிப்படி முன்னின்றோரும்; பாண்டியன் உயர்த்திப் பிடித்த மீனக்கொடியின் மீது, வளைதடியின் உருவம் தீட்டப்பெற்ற தம் கொடியையும் மகாமேரு பருவதத்தில் பொறித்து வைத்துக் கடலால் சூழப்பட்ட உலகில் பாதிக்குக் காவலர்களாக மனுநீதி முறைமைப்படி ஒழுகி விளக்கமுற்ற பெருமை பெற்ற புகழினையுடையவரும்; அரசர்கள் இவர்கள் என்று பாண்டியன் சொல்லவும் அரசுரிமையைக் கொண்டவர்களும், வெற்றியை யுடைய வடிக்கப்பட்ட வாளாயுதத்தை யுடையவர்களாய்க் கோட்டைகளைக் கைப்பற்றிக் காவல் புரியும் படை வீட்டவர்களான ஐந்து கோட்டை நாட்டவர்கள் என்னும் மறவர்கள். ௬

மா - அழகு

பெயர்ச்சொல்

[ம் + ஆ = மா]—மகரம் மனவொப்பு, மனநிறைவு, மனமகிழ்வு, மனத்தினிமை, மனவிருப்பம் எழுப்பத்தகு பொருளைக் குறிக்கும். ஆ என்பது ஆதல். ஆகவே, தன் சாயலைக் கண்ணாடி, நீர்நிலை முதலியவற்றில் தன்போக்கிற் கண்டுகொள்ள நிகழுங்கால் மனம் ஒப்பச் செய்து, மனக்குறையை ஒழித்து நிறைவாக்குவதற்கும், மகிழ்விளைப்பதற்கும், இன்பம் உண்டாக்குவதற்கும் தக்கது அழகு. ஆதலின், மா = அழகு என வழங்கலாயிற்று. மகரமானது முற்கூறிய பொருளை அன்றி உள் அடக்கம் எனும் தோற்றத்தையும் குறிக்கொண்டியலும். மா - என்பது வியங்கோளோடு வரும் அசைச்சொல்லாய் நிற்கும்போதும் 'உப்பின்று புற்கை யுண்க மா கொற்கையோனே'—கொற்கையோனே! உப்பில்லாமல் புற்கையை உண்க. மா, மனம் ஒப்ப, மனநிறைய, மனமகிழ, மனத்தினிதாக எனக் கொள்ளவும் குறிப்புப் பொருந்தி நிற்றல் காண்க. அன்றியும், மாவென்னும் ஒலி, பசுவையும் இளங்கன்றையும் கூவி அழைத்தல் என்னும் செயலுக்கும் துணைப்படும் ஒலிக் குறிப்பாம்.

மாவண்டு, பெருமை, பிண்டி, வாசி,
கூப்பிடல், வெறுத்தல் காவுறு விலங்கு
செல்வங் கருநிறங் கமலைபத்தாம்.

—சூடாமணி நிகண்டு.

மா - அளவு, எடை

பெயர்ச்சொல்

[ம் + ஆ = மா]—ஒன்றின் உள் நிகழும் அமைதிப் பண்பாகிய எண், நிறை, தூக்கம், கனம், நீட்டம், முகப்பு முதலிய வேறுபாடுகளைக் காண்போர்க்கு மனம் ஒப்புதலின் ஆக்கி எழும் பண்பாதலின், மா = அளவு என வழங்கல் ஆயிற்று. (மா - எடை எனலுமாம்).

மா - அறிவு

பெயர்ச்சொல்

[ம் + (அஃக =) ஆ = மா]—ஒரு பொருளைக் குறித்து, அதன் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்கால நிலைமை,

செய்மை அல்லது அண்மையதாய இருப்பு, வளர்ச்சி தளர்ச்சி, பெருக்கம் சுருக்கம், நிறைவு குறைவு, தோற்றம் மாற்றம் முதலியவற்றைக் கருதிப் பார்த்துத் தன் மனம் ஒப்பக் கண்டறிந்து நிலைவரப்பட்டிருக்கும் உட்கிடை என்னலின், மா= அறிவு எனலாயிற்று. இது தொழிற் பண்புப் பெயர்.

மா - உரையாணி

பெயர்ச்சொல்

[ம்+ஆ (அஃக—அக)=மா] உரைக்கப்பட்டிருக்கும் தன்னுள் அடக்கத் துகளின் ஒளிக்கும், மதிக்கப்படும் பொன் ஒளிக்கும் உள்ள ஒப்பு, உயர்வு, தாழ்வு என்னும் மாற்று நிலை கண்டு மனமொப்ப ஆக்குதலின், மா=உரையாணி எனல் ஆயிற்று.

மா - ஒருமா என்னும் இலக்கம்

பெயர்ச்சொல்

[ம்+ஆ=மா] ஒன்றென்னும் எண்ணின் உள்ளடக்கமாய், இருபது பங்கில் ஒரு பங்கா யளவுபட்டு யாரும் மனமொப்ப ஆகுமோர் அளவை யாதலின், மா=ஒருமா வென்னும் இலக்கமாயிற்று.

மா - கறுப்பு

பெயர்ச்சொல்

[ம்+ஆ=மா] எவ்வகை நிறத்தையும் விளக்கத்தையும் தன்னுள் அடங்கக் கொண்டு யாரும் ஒப்ப நிற்பது கருமையான இருட்டே யாதலின், இருட்டும் கறுப்பல்லாத வேறொரு பொருளா யில்லாமையின், மா=கறுப்பு என வழங்கலாயிற்று.

மாவே பெருமையும் கருமையும், சூதமும்
மேவிய நாற்காலுடையவும் வண்டும்
பூவுறை திருவென வாறையும் பொருந்தும்.
—திவாகரம்.

மா - பெருமை, மேன்மை

பெயர்ச்சொல்

[ம்+ஆ=மா] மனம் ஒப்பும் நிலையில் ஆகி நிறைவுற்று மனதுக்கு மகிழ்வையும் இன்பத்தையும் ஆக்கும் பண்பாய் அடுத்து நடைபெறலின், மா=(மாட்சி) பெருமை என வழங்கலாயிற்று.

மா - இடி மா, அரைத்த மா

பெயர்ச்சொல்

[ம்+ஆ=மா] உழுந்து, அரிசி, கிழங்கு, கடலை முதலியவற்றைத் தனித்தனி இடித்தும் அரைத்தும் அதனதனுள் அடங்கிய துகளின் குவையாக ஆக்கப்பட்டும், தன்னிலுள்ள சுவை நிறம் முதலிய பண்பால் தான் இன்ன இனம் எனக் கண்டு மதித்து மனமொப்பும் நிலைமையிலுள்ளதுமான பொடியே மாவாதலின், மா - இடி மா, அரைமா என்னப் பட்டது.

மா - துகள், பொடி

பெயர்ச்சொல்

[ம்+ஆ=மா] ஒன்றின் உண்ணிலையாக அமைந்து, அதனின்றும் எழுப்பப்பட்ட உள்ளடக்கமான பொருளே துகள் ஆதலின், மா=துகள் எனல் ஆயிற்று.

மா - நிறம்

பெயர்ச்சொல்

[ம்+ஆ=மா] வடிவின் உள் அடக்கமாய்நின்று மனவொப்பு, மனநிறைவு, மன்மகிழ்ச்சி, மனதுக்கினிமையாகும் தோற்றத்ததே நிறமாதலால், மா=நிறம் என்னும் பொருள் கொண்டது.

மா - பிரபை, ஒளி

பெயர்ச்சொல்

[ம்+ஆ=மா] நிறம் என்னும் பொருளேற்றம் போலவே அவ்வமைதிப் யுள்ளது பிரபை என்னும் ஒளி யாதலால், படிக்கே, மா=பிரபை, ஒளி எனலாயிற்று.

மா - கட்டு

பெயர்ச்சொல்

[ம்+ஆ=மா] தன்னில் அகப்படும் பொருள்களை உண்ணிலையாக்கி யமைந்து மனமொப்பி மகிழ நிற்றலின், மா= கட்டு என வழங்கலாயிற்று.

மா - மாமரம்

பெயர்ச்சொல்

[ம்+ஆ=மா[துய்ப்போர்க்குத் தன்னிலுள்ள குன்று, காய், கனி முதலியவைகளை மனமொப்ப, எண்ணம் நிறை

வேற்றம் பெற, மகிழ்கூர, மனதுக் கினிமையாகத் தந்து நிற்கும் ஒரு நிலை உயிர்ப் பொருளாதலின், மா = மாமரம் எனலாயிற்று.

மா - வயல், நிலம்

பெயர்ச்சொல்

[ம்+ஆ=மா] தன்னைப் பண்படுத்திப் பயிரிடுவோர்க்குத் தன்னில் உண்டாகும் விளைவை மனமொப்பி நிறைந்து மகிழ்கூர்ந்து இன்பமுறத் தந்து நிற்கும் நிலமாதலின், மா = வயலென வழங்கலாயிற்று. மேலும், வேலி என்னும் நில அளவையாகிய எண் ஒன்றில், மா என்பது இருபது கொண்டதாதலால், அவ்வளவுப்படி, பள்ள எட்டு மா, மேட்டாறு மா என அளவையாகு பெயராய் நிலத்துக்கு அமைதலும் உண்டு.

விடப்படாத் திணையே மாவே வேலிபூ
நிலம் நாற்பேரே. —சூடாமணி நிகண்டு.

மா - செல்வம்

பெயர்ச்சொல்

[ம்+ஆ=மா] துய்ப்போர்க்கு, மனம் ஒப்பு நிலை, மன நிறைவு, மனமகிழ்ச்சி, மனவின்பம் உண்டாகும்படி அடுக்கும் பொருள் செல்வமாதலின், மா = செல்வம் எனலாயிற்று.

மா - இலக்குமி, திருமகள்

பெயர்ச்சொல்

[ம்+ஆ=மா] மேற்கூறிய விதத்தில் துய்ப்போர்க்கு இன்பம் பயக்கி இம்மைக்குப் புகழ்பெருக்க இன்றியமையாத செல்வப்பொருளை அருள்பவள் திரு என்னும் இலக்குமியாதலின், மா = இலக்குமி, திரு எனலாயிற்று.

பொறிமா வாக்கம் செல்விபொன் பூமகள்
—திவாகரம்

மா - ஞானமூர்த்தி, சரசுவதி

பெயர்ச்சொல்

[ம்+ஆ=மா] மா வென்பது முற்கூறிய அமைதிப்படி [illegible] அனைப்புபடுதலால் அறிவைத் தந்தருள்பவளாகிய ஞானமூர்த்தி என்னும் சரசுவதிக்கு மாவென்னும் பெயர் அமைந்தது.

199653

1934 டிசம்பரில்

வெளிவந்த கழகப் பதிப்புகள்

மேனாட்டு வணிகமன்னர்

இதன்கண் (1) ராக்ஃபெல்லர், (2) ஹென்ரி போர்டு (3) சர் தாமஸ் லிப்டன் முதலிய பன்னிரு உலகப் பெருஞ் செல்வர்களின் வரலாறுகள் அடங்கியன.

படங்களுடன் ராப்பர் விலை அணா 10

போர்க் கருவிகளின் வரலாறு படங்களுடன் அணா 8

SAINT APPAR: HIS LIFE AND TEACHINGS

By M. S. Purnalingam Pillai, B.A., L.T. Price As. 12

நான்மணிக்கடிகை விருத்தியுரை விலை அணா 8

திருமதி நீலாம்பிகையம்மையார் எழுதிப் பதித்தவை:—

அருஞ்செய லிருவர்

இதன்கண் சிறுத்தொண்டர், திருநீலகண்டர் வரலாறுகள் ஆராய்ச்சியுடன் அடங்கியன. இதன் விலை அணா 5.

பட்டினத்தார் பாராட்டிய மூவர்

இதன்கண் (1) சிறுத்தொண்டர், (2) திருநீலகண்டர், (3) கண்ணப்பர் முதலிய மூவர் வரலாறுகள் ஆராய்ச்சியுடன் அடங்கியன. இதன் விலை அணா 14

திருவண்ணாமலைக் கலம்பகம்	1	0
Yoga Asanas in English	0	8
சுதாரதம்	0	8
மெய்கண்ட சாஸ்திரம் (சமாஜம்)	3	4
திருக்குற்றாலக் குறவஞ்சி	1	0
மாறனகப்பொருளும் திருப்பதிகக் கோவையும்	0	15
ராஜராஜன் (மணி. திருநாவுக்கரசு முதலியார்)	1	8
நவீன தர்க்கம் (Rev. ஞானப்பிரகாசம்)	2	8

T. M. பொன்னுசாமிப்பிள்ளை நாவல்கள்

ஞானசம்பந்தம்	1	4	ஞானப்பிரகாசம்	1	8
சிவஞானம்	1	4	கமலாட்சி	1	12

வெளிப் பதிப்பு

பட்டினத்தார் பிரபந்தம் விருத்தியுரை 4 0

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

6, பவளக்காரத் தெரு, சென்னை